பக்கங்கள் – 16

விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 175

புதன்கிழமை
21 மே 2025

வைகாசி 07 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

புதன்பொய்கை


## சொகுசுப்பேருந்து மோதி வயோதிபர் ஒருவர் பலி!

### கைதடியில் சம்பவம்

கொடிகாமம் மே 21

யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு நோக்கிச் சென்ற சொகுசுப் பேருந்து மோதியதில், வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்

15

# புலிகளால் பிடிக்கப்பட்ட மக்களை பத்திரமாக மீட்டது படையினராம்!

### இனவழிப்பும் நடக்கவில்லை, போர்க்குற்றங்களும் நிகழவில்லை

### வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

விடுதலைப்புலிகளால் பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருந்த பொதுமக்களை, படையினரே பத்திரமாக மீட்டனர். எந்தவொரு போர்க்குற்றத்திலும் படையினர் ஈடுபடவில்லை - இவ்வாறு வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

15

## வடக்கு பிரதம செயலாளராக தனுஜா முருகேசன் நியமனம்



யாழ்ப்பாணம், மே 21

வடக்கு மாகாண பிரதம செயலாளராக திருமதி தனுஜா முருகேசன் நியமிக்கப்பட்டுள்ளார். அவருக்கான நியமனக் கடிதத்தை ஜனாதிபதி

15

## விடுதலைப்புலிகள் மீண்டும் தலைதூக்குவதற்கு வாய்ப்பு

### சொல்கின்றார் பொன்சேகா

கொழும்பு, மே 21

புலிகளை மீண்டும் உருவாக்கி நாட்டில் பிரச்சினையை உண்டுபண்ண வேண்டும் என்று சில புலம்பெயரிகள் விரும்புகின்றனர். அதற்காக அவர்கள் பணத்தைத் தாராளமாகச் செலவழிக்கவும் தயாராக உள்ளனர். ஆதலால், புலிகள் மீண்டும் தலைதூக்கு

15



படம் - ஐ. சிவசாந்தன்

## அசைவ உணவகத்தை உடனடியாக மூடுங்கள்!

### நல்லூரில் நேற்றுப் போராட்டம்



யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் - நல்லூரில், யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு முன்பாக

15

## இரத்த வாந்தி; ஒருவர் பலி!

யாழ்ப்பாணம், மே 21

மூச்சுவிடச் சிரமப்பட்ட குடும்பத்தலைவர் ஒருவர், இரத்த வாந்தியெடுத்து உயிரிழந்துள்ளார்.

15

## முள்ளிவாய்க்கால் 16 ஆம் ஆண்டு நினைவுநாள் நிகழ்வுகள்



முள்ளிவாய்க்கால் 16 ஆம் ஆண்டு நினைவுகள் 18.05.2025 ஞாயிற்றுக் கிழமை

**Oxford** - பிரித்தானியாவில் உணர்வுபூர்வமாக நடைபெற்றது.

(CS58331) J-1



## காணி விவகாரம் தொடர்பாக நாடாளுமன்றில் விசேட கூட்டம்

விரிவு பக்கம்:-15

## முச்சந்தி முரளி

'மொட்டும் திசைகாட்டியும் ஒண்டு, இதை அறியாத சனங்கள் தான் மண்டு'

## கிருமித்தொற்றால் ஒருவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், மே 21

உடலில் கிருமித்தொற்று ஏற்பட்டு, குடும்பத் தலைவர் ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

ஆனைக்கோட்டை கூழாவடி பகுதியைச் சேர்ந்த நாகையா நிறோஜன் (வயது - 38) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

15

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

| கொவிசெத | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 4077 |
| ஆங்கில எழுத்து | C |
| வெற்றி இலக்கங்கள் | 01 13 54 62 |
| விசேட எழுத்து | C |

| ஹந்தஹன ராசி சுப பலன் | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1144 |
| வெற்றி இலக்கினம் | மீனம் |
| வெற்றி இலக்கங்கள் | 01 06 43 53 |

| NLB ஜய | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0103 |
| ஆங்கில எழுத்து | G |
| வெற்றி இலக்கங்கள் | 5 7 0 9 |

| மெகா பவர் | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 2183 |
| ஆங்கில எழுத்து | S |
| சுப்பர் இலக்கம் | 09 |
| வெற்றி இலக்கங்கள் | 07 08 37 54 |

| மஹஜன சம்பத | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 5835 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 6 8 0 5 1 6 |

| தன நிதானய | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 1865 |
| ஆங்கில எழுத்து | B |
| வெற்றி இலக்கங்கள் | 10 23 39 44 |
| விசேட எழுத்து | B |

| அத சம்பத | |
|---|---|
| திகதி | 20.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் | 0410 |
| ஆங்கில எழுத்து | R |
| வெற்றி இலக்கங்கள் | 0 5 1 6 |

AMNESTY INTERNATIONAL

# கடந்தகாலத் தோல்விகளை மாற்றி பொறுப்புக்கூறலை நிலைநாட்டுக

## வலியுறுத்துகின்றது சர்வதேச மன்னிப்புச்சபை

**கொழும்பு, மே 21**

**இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் போர்க்குற்றங்களை மறுத்ததுடன், அவை தொடர்பில் நம்பத்தகுந்த விசாரணைகளை மேற்கொள்ளத் தவறின. தற்போதைய அரசாங்கமாவது கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர் செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? என சர்வதேச மன்னிப்புச்சபை கேள்வி எழுப்பியுள்ளது.**

சர்வதேச மன்னிப்புச்சபையின் உத்தியோகபூர்வ 'எக்ஸ்' தளத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் பதிவில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

உள்நாட்டுப்போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டு 16 வருடங்கள் பூர்த்தியாகும் ஞாயிற்றுக்கிழமை முள்ளிவாய்க்காலில் ஆயிரக்கணக்கான தமிழர்கள் ஒன்றுகூடினர். வலிந்து காணாமலாக்கப்படல் சம்பவங்கள் உள்ளடங்கலாக போர் இடம்பெற்ற காலப்பகுதியில் பதிவான சர்வதேச சட்டங்களுக்குப் புறம்பான மிகமோசமான மீறல் குற்றச்சாட்டுகள் தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் இன்னமும் நீதியையும், பொறுப்புக்கூறலையும் கோரிவருகின்றனர். இருப்பினும் அத்தகைய குற்றங்கள் எவையும் இடம்பெறவில்லை என இலங்கையின் கடந்தகால அரசாங்கங்கள் மறுத்து வந்தன, நம்பத்தகுந்த விசாரணைகளை முன்னெடுப்பதற்கும் தவறியிருக்கின்றன.

தற்போதைய புதிய அரசாங்கமேனும் கடந்தகால அரசாங்கங்களின் தோல்விகளைச் சீர்செய்து, நீதியையும் பொறுப்புக்கூறலையும் நிலைநாட்டுமா? பாதிக்கப்பட்ட தரப்பினரின் நீதிக்கான கோரிக்கைக்கு சர்வதேச சமூகம் ஆதரவளிக்கவேண்டும்- என்றுள்ளது. (எ-இ)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0543 | | |
| ஆங்கில எழுத்து | P | வெற்றி இலக்கம் | 0 2 5 6 2 7 |

| Super Ball | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| சீட்டிழுப்பு வாரம் | 2809 | ஆங்கில எழுத்து | T |
| வெற்றி இலக்கம் | 11 16 70 75 | | |

| சனிதா | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | K | வெற்றி இலக்கம் | 01 32 43 62 |
| வெற்றி வாரம் | 4970 | | |

| SASIRI | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| வெற்றி வாரம் | 0686 | வெற்றி இலக்கம் | 01 43 48 |

| லக்ன ராசி | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| மேஷம் | | வெற்றி இலக்கம் | 06 31 38 53 |
| சீட்டிழுப்பு வாரம் | 4521 | | |

| KAPRUKA | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | A | சுப்பர் இலக்கம் | 37 |
| வெற்றி இலக்கம் | 10 24 25 53 | வெற்றி வாரம் | 1985 |

| அத கோடிபதி | | | |
|---|---|---|---|
| திகதி | 20.05.2025 | தினம் | செவ்வாய்க்கிழமை |
| ஆங்கில எழுத்து | J | வெற்றி இலக்கம் | 26 47 50 71 |
| வெற்றி வாரம் | 2635 | | |

# நளிந்தவுக்கு பதிலாக ஹன்சக

கொழும்பு, மே 21

சுகாதாரம் மற்றும் ஊடகத்துறை அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளிநாடு சென்றுள்ள நிலையில், பதில் அமைச்சராக மருத்துவர் ஹன்சக விஜேமுனி நியமிக்கப்பட்டுள்ளார். இந்த நியமனம் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவால் வழங்கப்பட்டுள்ளது.

அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ ஜெனிவாவில் நடைபெறும் உலக சுகாதார அமைப்பின் 78ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளச் சென்றுள்ளார். (எ-இ)

# தமிழின அழிப்புத் தொடர்பில் அமைதியாக இருக்கக்கூடாது

## ஒன்ராரியோ எம்.பி. சுட்டிக்காட்டு

றொறன்ரோ, மே 21

தமிழின அழிப்புத் தொடர்பில் நாம் அமைதியாக இருக்கக் கூடாது. நாம் பாதிக்கப்பட்டவர்களின் கதைகளைத் தொடர்ந்து பகிர்ந்துகொண்டேயிருக்க வேண்டும்.

இவ்வாறு கனடாவின் ஒன்ராரியோ மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் விஜய் தணிகாசலம் வலியுறுத்தியுள்ளார். அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

2009 ஆம் ஆண்டு மே மாதம் யுத்த சூன்ய வலயங்கள் மற்றும் மருத்துவமனைகளை இலக்கு வைத்து தாக்குதல் நடத்தியும், முள்ளிவாய்க்காலில் சிக் குண்டிருந்த மக்களுக்கு உணவு மற்றும் மருந்துப்பொருள்களை வழங்க மறுத்தும் இலங்கை அரசு இனவழிப்பொன்றை அரங்கேற்றியது.

இந்த வரலாறு மீண்டும் சம்பவிக்காதிருப்பதை உறுதிப்படுத்துவதற்கான கடப்பாடு சகலருக்கும் உண்டு.

பாதிக்கப்பட்டவர்களது கதைகளைத் தொடர்ந்து பகிர்ந்து கொண்டேயிருக்கவேண்டும் - என்றார். (எ-இ)



# கெஹலியவுக்கு மறியல் நீடிப்பு

கொழும்பு, மே 21

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெலவை எதிர்வரும் ஜூன் மாதம் 3 ஆம் திகதி வரை மீண்டும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதான நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கெஹலிய ரம்புக்வெல ஊழல் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணைக்காக கடந்த 7ஆம் திகதி இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் முன்னிலையாகியபோது ஆணைக்குழு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட பின்னர் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (ச-இ)

# இராணுவத்தினர் புறக்கணிப்பு

## நாமல் ராஜபக்ச கொதிப்பு

கொழும்பு, மே 21

தற்போதைய அரசாங்கம் இராணுவத்தினருக்கு முன்னுரிமையளிப்பதில்லை. விடுதலைப்புலிகளை நினைவுகூரும் நிகழ்வுகளுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாட்டின் இராணுவ வீரர்களுக்காகவும், ஒற்றையாட்சிக்காகவும் என்றும் நாம் முன்னிற்போம். ஆனால் தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் கொள்கைகளில் இராணுவத்தினருக்கு முன்னுரிமை இல்லை.

போரில் உயிர்நீத்த படைவீரர்களை நினைவு கூரும் நிகழ்வுக்கு சகல முன்னாள் அரச தலைவர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட வேண்டும்.

நல்லாட்சி அரசாங்கத்தில் இராணுவத்தினர் பழிவாங்கப்பட்டனர். புலனாய்வுப் பிரிவு வீழ்ச்சியடைந்தது. அதன் காரணமாகவே உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல்கள் இடம்பெற்றன. தற்போது பாதாள உலகக் குழுக்கள் தலைதூக்கியுள்ளன. நீதிமன்றத்துக்குள் துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்படுமளவுக்கு புலனாய்வுப் பிரிவு பலவீனமடைந்துள்ளது. புலனாய்வுப்பிரிவை பலவீனப்படுத்திவிட்டு தேசிய பாதுகாப்புத் தொடர்பில் வகுப்பெடுப்பதில் பிரயோசனம் இல்லை - என்றார். (ச-இ)

# சந்தேகநபர்களின் உயிரைக் காப்பது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பு

## இலங்கை மன்னிப்புச்சபை தெரிவிப்பு

கொழும்பு, மே 21

**கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களின் உயிரைப் பாதுகாப்பது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பாகும். ஒவ்வொரு தனிமனிதனுக்கும் உயிர்வாழும் உரிமை உண்டு என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.**

கொழும்பில் நேற்றுமுன்தினம் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த ஆணைக்குழுவின் தலைவர் எல்.டீ.பி. தெஹிதெனிய தெரிவித்ததாவது - கடந்த சில நாள்களாக பொலிஸ் நிலையங்களின் சிறைக்கூண்டுகளில் தடுத்து வைக்கப்படும், பொலிஸாரால் கைதுசெய்யப்படும் சந்தேகநபர்கள் உயிரிழக்கும் சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. இது அடிப்படை மனித உரிமை மீறலாகும். கைதுசெய்யப்படும் சந்தேகநபர்கள் குற்றவாளியா, இல்லையா என்பதை உறுதிசெய்வதும், குற்றவாளிகளுக்கு உரிய தண்டனைகளை வழங்குவதும் சட்டத்தின் பொறுப்பாகும். அதேபோல கைதுசெய்யப்படும் சந்தேகநபர்களின் உயிரைப் பாதுகாப்பது பொலிஸ் அதிகாரிகளின் பொறுப்பாகும். சந்தேகநபர்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளனவா என்பதை ஆராய்ந்து, உரிய நடவடிக்கைகளை எடுப்பது மனித உரிமைகள் ஆணைக்குழுவின் செயற்பாடாகும். ஒரு சந்தேகநபரை கைதுசெய்யும்போது பொலிஸ் அதிகாரிகள் எவ்வாறு செயற்படவேண்டும் என்பது தொடர்பான வழிகாட்டிக் கையேடு ஒன்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவால் பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

அனைத்துப் பொலிஸ் அதிகாரிகளும் இந்தக் கையேட்டில் குறிப்பிடப்படும் விடயங்களை நிச்சயம் கடைப்பிடிக்க வேண்டும்-என்றார். (எ-இ)

# வெளிநாட்டுத் தூதுவர்களுடன் தமிழ்த் தேசியப் பேரவை சந்திப்பு

கொழும்பு, மே 21



தமிழ்த் தேசியப் பேரவையின் பிரதிநிதிகளுக்கும் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் இடையே நேற்று சந்திப்புக்கள் நடந்துள்ளன. ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர், சுவிட்ஸர்லாந்து தூதுவர், அமெரிக்கத் தூதுவர் ஆகியோரை தமிழ்த் தேசியப் பேரவையினர் சந்தித்துள்ளனர்.

இந்தச் சந்திப்பின்போது, காணிச் சுவீகரிப்புத் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல், தையிட்டி திஸ்ஸ விகாரை விவகாரம், குருந்தூர்மலை விவகாரம், பயங்கரவாதத் தடைச்சட்டம் தொடர்பில் தூதுவர்களிடம் பேரவையினரால் சுட்டிக்காட்டப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியப் பேரவையின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செ.கஜேந்திரன், தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர் ந.காண்டீபன் ஆகியோர் இந்தச் சந்திப்புகளில் கலந்துகொண்டிருந்தனர். (எ-125)

# தொழிற்றுறை கற்கைநெறி; சா/தரச் சித்தி அவசியமல்ல!

## கல்வி அமைச்சு அறிவிப்பு

கொழும்பு, மே 21

க.பொ.த. உயர்தர வகுப்பில் தொழிற்றுறைப் பாட கற்கைநெறியைத் தெரிவுசெய்யும் மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தியிருக்கத் தேவையில்லை எனக் கல்வியமைச்சு அறிவித்துள்ளது.

28 பாடங்கள் தொழில்முன்னிலைப் பாட கற்கைநெறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன. இந்த 28 பாடங்களையும் கற்கவிரும்பும் மாணவர்கள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சித்தியெய்தியிருக்கத் தேவையில்லை எனவும் இதனூடாக NVQ level -4 சான்றிதழ்களை மாணவர்கள் பெற்றுக்கொள்ளலாம் .

இந்த தொழிற்றுறை பாடத்திட்டம் “13 ஆம் ஆண்டு சான்றளிக்கும் கல்வித் திட்டத்தின்” கீழ் முன்னெடுக்கப்படுகின்றது.

இது தொடர்பான மேலதிக விபரங்களை https://moe.gov.lk/2025/05/37984/ என்ற இணையத்தளத்தில் பார்வையிடலாம் எனவும் கல்வியமைச்சு அறிவித்துள்ளது. (ச-33-6)



# வடக்கு ஆளுநருடன் கடற்படைத் தளபதி சந்திப்பு

கொழும்பு, மே 21

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகனுக்கும் வடக்கு கடற்படைத் தளபதி ரியல் அட்மிரல் எஸ்.ஜே.குமாரவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மு.ப. 10 மணியளவில் ஆளுநர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது யாழ். மாவட்டத்திலுள்ள கடல் கடந்த தீவுகளுக்கான போக்குவரத்து வசதிகள் தொடர்பிலும், வடக்குக்கான போதைப்பொருள் கடத்தல்களைத் தடுப்பது தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது. (ச-27)




**நே**ற்று பட்சிக்கு ஒரு ரெலிபோன் கோல். சுன்னாகத்தில இப்ப படுத்தபடுக்கையா இருக்கிற முந்தின போஸ்ட்மாஸ்டர் திருநாவுக்கரசு தான் கதைச்சவர்.

‘எனக்குக் காது கேக்காது. அதால நீங்கள் சொல்றது ஒண்டும் எனக்குக் கேக்காது. இண்டைக்கு உங்கட பேப்பர் பார்த்திட்டு சில விசயங்களைச் சொல்லோணும் போல இருந்தது. அதுதான் கதைக்க எடுத்தன்’ எண்டு சொல்லிப்போட்டு ஆள் முழங்கத் தொடங்கிட்டார்.

‘இப்ப அரசாங்க உத்தியோகத்தில இருக்கிறவன் எல்லாம் சனத்துக்குச் சேவை செய்யிறேலை. தாங்கள் உழைக்கிற வழியளையளைத்தான் பாக்கிறாங்களேதவிர சனத்தைப்போட்டு தேவையில்லாமல் பிழிஞ்செடுக்கிறாங்கள். உங்கட பேப்பரில வந்த செய்தியில லஞ்சம் வாங்கினவை, பொம்பிளைப் பிரச்சினையள் எண்டு கொஞ்சப்பேருக்கு பதவி பறிச்சதெண்டு வாசிச்சன். உந்தத் தண்டனை பத்தாது. முந்தின காலமெண்டால் உவைக்கு என்ன பனிஸ்மெண்ட் எண்டு தெரியும் தானே. உப்பிடியானவங்கள் தாங்கள் சோக்குப் பண்ணிக்கொண்டு, யாழ்ப்பாணத்தை நாற வைக்கிறாங்கள். சண்டை நடந்த காலத்திலதான் உண்மையாச் சனத்துக்கு சேவை செய்யிற அதிகாரிமார் இருந்தவை.

ஒரு கதை சொல்லுறன், கேள். சண்டைக் காலத்தில இஞ்ச பெரும் காசுத்தட்டுப்பாடு. அப்ப நான்தான் போஸ்ட்மாஸ்டர். சனங்கள் ஒரு வங்கி யிலையும் காசில்லை எண்டு ஓடித்திரிஞ்சவை. நான் கொழும்புக்கு கடிதம் எழுதி போஸ்ட் ஒப்பீஸ்’களுக்குள்ளால சனத்துக்கு காசு குடுக்கோணும் எண்டு கடிதம் எழுதிக்கேட்டன். அதுக்கு அவங்கள் ‘புலிக்குக் குடுக்கவோ காசு கேக்கிறாய்?’ எண்டு அனுப்பேலை. அப்பவும் நான் விடேலை. அப்ப அமைச்சரா இருந்த தொண்டமானுக்கு இஞ்சத்தை நிலைமையை வடிவா விளக்கி ஒரு கடிதம் எழுதினன். சனங்கள் காசில்லாமல் எப்பிடியெல்லாம் கஷ்டப்படுகுது எண்டு அந்தக் கடிதத்தில சொல்லிப்போட்டு , ‘இந்தக் காசில ஒரு சதம் கூட புலிக்குப் போகாது. முழுக்காசும் சனத்துக்குத்தான் குடுப்பம். அதுக்கு நான் பொறுப்பா நிக்கிறன்’ எண்டும் எழுதியிருந்தன். அதை வாசிச்சுப்போட்டு, உடனேயே தொண்டமான், மக்கள் வங்கிப் பெரியவருக்கு அனுப்பி, ‘யாழ்ப்பாணத்துக்கு உடன காசு அனுப்புங்கோ’ எண்டு அவரும் சிபார்சு செய்து எழுதியிருக்கிறார். ஒரு அமைச்சரே இப்பிடி சிபாரிசு பண்ணேக்க இனியும் சும்மா இருக்கேலாது எண்டிட்டு மக்கள் வங்கியால அப்பவே 50 கோடி ரூபா எடுத்தந்து சனத்துக்கு குடுத்தனாங்களடா.

நான் போஸ்ட்மாஸ்டர்தான். ஆனால் பியோன்மார் சிலவேளை செல்லடி , பிளேனடி எண்டா வரமாட்டினம். அதுக்காக கடுதாசியளை தேங்க விடேலுமோ? நானே சைக்கிளில போய் அவ்வளவு கடிதத்தையும் வீடுவீடாக் குடுப்பன். இப்ப இருக்கிறவை மாதிரி நாங்கள் ஏசிக்குள்ள இருந்துகொண்டு, இப்பிடி சம்பளத்துக்கு மேலால கிம்பளம் வாங்கிக் கொண்டிருக்கேலை. சனத்துக்காக சேவைசெய்த அதிகாரியளும் இருந்தவை எண்டு எங்கட சனத்துக்கு தெரியோணும். இப்ப இருக்கிற அதிகாரிமாருக்கும் தெரியோணும். அப்பதான் கொஞ்சமெண்டாலும் அவையளும் வாங்கிற சம்பளத்துக்கு சேவை செய்வினம்’ எண்டு சொல்லிப்போட்டு போனை வைச்சிட்டார்.

அவர் சொல்றதிலை ஏதும் பிழை இருக்கோ?

padsi@uthayan.com - பட்சி



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** காரியங்களில் அனுகூலம் உண்டாகும் நாள். தந்தைவழியில் ஆதாயம் கிடைப்பதுடன் செலவுகளும் ஏற்படும். வாழ்க்கைத்துணையால் மகிழ்ச்சி உண்டாகும். உறவினர்களுடன் ஏற்பட்ட மனவருத்தங்கள் நீங்கி சுமுகமான உறவு ஏற்படும்.

**இடபம்:** காரியங்கள் அனுகூலமாகும். சகோதரர்கள் கேட்கும் உதவியைச் செய்வீர்கள். மாலையில் உறவினர்களுடன் தொடர்புகொண்டு பேசி நலம் விசாரிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் மேம்படும். நண்பர்கள் உதவிகேட்டு வருவார்கள். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்பட்டு நீங்கும்.

**மிதுனம்:** திடீர்செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய வேண்டிவரும். உறவினர்கள் வருகை மகிழ்ச்சி தரும்.

**கடகம்:** மனதில் இனந்தெரியாத சோர்வு ஆட்கொள்ளும். வாழ்க்கைத்துணையால் செலவுகள் ஏற்படும். எதிர்பார்த்த பணம் கிடைப்பது தாமதமாகும். கடன்கள் விஷயத்தில் கவனம் தேவை. உங்கள் தேவையை அறிந்து மற்றவர்கள் உதவி செய்வது ஆறுதலாக இருக்கும்.

**சிம்மம்:** தாய்வழிஉறவில் எதிர்பார்த்த பண உதவி கிடைக்கும். உங்கள் முயற்சிக்கு வாழ்க்கைத் துணையின் ஒத்துழைப்புக்கிடைக்கும். உடல் ஆரோக் கியத்தில் கவனம் தேவை. பிள்ளைகளால் பெருமை உண்டாகும். கணவன்–மனைவிக்கிடையே அந்நி யோன்யம் அதிகரிக்கும்.

**கன்னி:** தாயின் அன்பும் ஆதரவும் கிடைக்கும். பிள்ளைகளின் தேவைகளை மகிழ்ச்சியுடன் நிறைவேற்றுவீர்கள். சிலருக்கு திடீர் பணவரவுக்கும், திடீர்ச் செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. வியாபாரத்தில் விற்பனை சுமாராகத்தான் இருக்கும். மகாலட்சுமியை வழிபடுவதன்மூலம் பிரச்சினைகள் நீங்கும்.

**துலாம்:** புதிய முயற்சிகள் சாதகமாகமுடியும். காரியங்களில் அனுகூலம் உண்டாகும். பிள்ளை அல்லது பெண்ணின் உடல் ஆரோக்கியம் மேம்படும். பிள்ளைகளால் எதிர்பாராத செலவுகள் ஏற்படும். சிலருக்குக் குடும்பம் தொடர்பான வேலையை முன்னிட்டு சற்று அலைச்சல் ஏற்படலாம்.

**விருச்சிகம்:** மகிழ்ச்சியானநாள். ஆனால், தாயாரின் உடல் ஆரோக்கியத்தில் கூடுதல் கவனம் செலுத்தவும். சிலருக்கு வாழ்க்கைத் துணையுடன் மனஸ்தாபம் ஏற்பட வாய்ப்பு உள்ளதால் ஒருவரையொருவர் அனுசரித்துச் செல்வது நல்லது.

**தனுசு:** மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். நீண்டநாள்களாக எதிர்பார்த்த பணம் இன்று கிடைப்பதற்கு வாய்ப்பு உண்டு. ஆனாலும் செலவுகள் அதிகரிப்பதால் சிலருக்குக் கடன் வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். நண்பர்கள் பணஉதவிகேட்டு வருவார்கள்.

**மகரம்:** முக்கிய முடிவுகள் எடுப்பதற்கு உகந்த நாள். சகோதரர்களால் ஆதாயம் உண்டாகும். எதிர்பார்த்த பணம் கைக்குவரும். சிலருக்கு புதிய ஆடை, ஆபரணங்கள் வாங்கும் வாய்ப்பு ஏற்படும். எதிர்பாராத பணவரவுக்கு வாய்ப்பு உள்ளது.

**கும்பம்:** புதிய முயற்சிகளை பிற்பகலுக்குமேல் தொடங்குவது சாதகமாகமுடியும். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்து கொடுப்பீர்கள். தாய்வழி உறவினர்கள் தொடர்பு கொண்டு மகிழ்ச்சியான செய்தியைப் பகிர்ந்து கொள்வர்.

**மீனம்:** இன்று எதிலும் பொறுமையுடன் செயற்பட வேண்டியநாள். எதிர்பாராத செலவுகளால் சிலருக்குக் கடன்வாங்கவேண்டிய சூழ்நிலையும் ஏற்படும். வாழ்க்கைத்துணையின் தேவைகளைப் பூர்த்திசெய்யும்வகையில் அலைச்சல் உண்டாகும். சகோதரர்களால் சில சங்கடங்கள் ஏற்படும்.

# சென்னையை நேற்று வீழ்த்தி விடைபெற்றது ராஜஸ்தான்



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில், சென்னையைத் தோற்கடித்து வெற்றியுடன் தொடரை நிறைவுசெய்தது ராஜஸ்தான் றோயல்ஸ்.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ராஜஸ்தான் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை அணி 8 விக்கெட்களை இழந்து 187 ஓட்டங்களைப் பெற்றது. அதிகபட்சமாக ஆயுஷ் மாத்ரே 43 ஓட்டங்களையும், பிரேவிஸ் 42 ஓட்டங்களையும் பெற்றனர்.

பதிலுக்குக் களமிறங்கிய ராஜஸ்தான் அணி 17 பந்துகள் மீதமிருக்கையில் 4 விக்கெட்களை இழந்து 6 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

14 வயதேயான வைபவ் சூரியவன்ஷி நேற்றும் சிறப்பாக விளையாடினார். அவர் 33 பந்துகளில் 57 ஓட்டங்களைப் பெற்றார். சாம்சன் 41 ஓட்டங்களையும், ஜெய்ஸ்வால் 36 ஓட்டங்களையும் பெற்றனர்.

**வாழ்வா சாவா?**

இன்று நடைபெறும் ஆட்டத்தில் டெல்லி மற்றும் மும்பை அணிகள் மோதவுள்ளன. இன்றைய ஆட்டத்தில் மும்பை அணி வெற்றிபெறும் பட்சத்தில் அந்த அணி பிளேஓவ் சுற்றுக்குத் தகுதிபெறும். டெல்லி அணி வெற்றிபெற்றால், இரண்டு அணிகளின் அடுத்த ஆட்டத்தைப் பொறுத்து பிளேஓவ் வாய்ப்புத் தீர்மானிக்கப்படும். (ம)

# மனித உரிமைகள் ஆணையாளர் இலங்கைக்கு கண்காணிப்பு விஜயம்

## வெளிவிவகார அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 21

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் எதிர்வரும் ஜூன் மாதம் 24 ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொண்டு கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளார் என வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்துள்ளார்.

தனியார் தொலைக்காட்சியொன்றில் ஒளிபரப்பான அரசியல் விவாத நிகழ்ச்சியின்போதே அமைச்சர் இந்தத் தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசியல் ரீதியில் தற்போது வங்குரோத்தடைந்துள்ள தரப்பினரே தமக்கு புத்துயிர் அளித்துக்கொள்வதற்கு போரை பயன்படுத்த முற்படுகின்றனர். தற்போது சமாதானம் என்பதே முக்கியம். அதனை செய்வதற்கு நாம் முன்வரவேண்டும்.

அந்த இலக்கை நோக்கியே நாம் பயணிக்கின்றோம். உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு யோசனை எம்மால் முன்வைக்கப் பட்டதுதான். போர் முடிந்த பிறகு செய்யப்படவேண்டிய விடயங்கள் முன்னெடுக்கப்படாததால்தான் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பில் தீர்மானமொன்று உள்ளது.

தேசிய பொறிமுறை ஊடாக நடவடிக்கை எடுக்கப்படும் என நாம் உறுதியளித்துள்ளோம். அதற்குரிய நடவடிக்கை முன்னெடுக்கப்படு கின்றது.

எனவே, இனவாதம் பேசினால் அது நல்லினக்க முயற்சிக்கு தடையாக அமையும்.

மனித உரிமை ஆணையாளர் எதிர்வரும் ஜூன் 24 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார். இலங்கைக்கு வந்து பிரதேசங்கள் மற்றும் நிறுவனங்களை கண்காணிப்பார். அதன் அடிப்படையில் அறிக்கை தாக்கல் செய்யப்படும். அந்தச் சவாலுக்கும் நாம் முகங்கொடுக்கவேண் டும். ஐ.நா. மனித உரிமைகள் பேரவை தலையிட்டாலும், தலையிடாவிட்டாலும்கூட தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் பொறுப்பு எமக்கு உள்ளது - என்றார். (ச-44)

# கசிப்புடன் ஒருவர் கைது

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் கசிப்புடன் குடும்பஸ்தர் ஒருவர் பொலிஸாரால் நேற்றுக் கைதுசெய்யப்பட்டுள்ளார். விசேட ரோந்து நடவடிக்கைகளின்போது சந்தேகத்துக்கிடமானமுறையில் நடமாடியவரை வழிமறித்துச் சோதனையிட்டபோதே இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது. சந்தேகநபரிடமிருந்து 750 மில்லிலீற்றர் கசிப்புக் கைப்பற்றப்பட்டது. சந்தேகநபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (ச-125)

# சிறப்புச் சொற் பொழிவு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணம் நீர்வேலி அருள்மிகு கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெறும் வாராந்தச் சுக்கிரவாரக் கந்தபுராணப்படனத் தொடர்-22 ஆவது சொற்பொழிவு ஆலய சண்முக விலாச மண்டபத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு சிவநெறிப்பிரகாசர் , சமயஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் இடம்பெறவுள்ளது.

ஆலயத்தின் பிரதம குருக்கள் ஸ்கந்தகுரு ஞானபானு, சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக்குருக்களின் ஆசியுரையையும் பரிபாலனசபைத் தலைவர் சி. தயாநாதன் தலைமையுரையையும் ஆற்றவுள்ளனர்.

சிறப்புச்சொற்பொழிவை இளஞ்சைவப்புலவர் பிரசங்கச்சுடர் க. கயிலைவாசன் 'அசுரேந்திரன் மகேந்திரஞ்செல் படலம்' எனும் விடயப்பொருளில் நிகழ்த்தவுள்ளார். (ச)

# சீனப் பேராசிரியர் பங்கேற்புடன் யாழ்.பல்கலையில் கருத்தரங்கு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொருளியல் துறையின் ஏற்பாட்டில் நடைபெறும் கருத்தரங்கில் சீன நாட்டுப் பேராசிரியர் ஹீ யான் பங்கேற்று சிறப்புரையாற்றவுள்ளார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி கலையரங்கத்தில் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை காலை 10 மணி முதல் 12 மணி வரை இந்த நிகழ்வு நடைபெறவுள்ளது. "சீனாவின் விரைவான பொருளாதார வளர்ச்சி மற்றும் முழுமையான வறுமை ஒழிப்பு: இலங்கைக்கான பாடங்கள்" எனும் தலைப்பில் குறித்த உரை நிகழ்த்தப்படவுள்ளது. சீனாவின் தலைநகரான பீஜிங்கில் உள்ள சிங்குவாப் பல்கலைக்கழகத்தில் சர்வதேசப் பகுதி ஆய்வுகள் கற்கை நிறுவனத்தின் உதவிப் பேராசிரியராக ஹீ யான் செயற்படுகிறார். சீனாவின் வளர்ச்சி அனுபவத்திலிருந்து இலங்கையின் பொருளாதார எதிர்காலத்துக்கான நுண்ணறிவுகளை ஆராயும் சிந்தனையைத் தூண்டும்வகையில் இந்தக் கருத்தரங்கு ஏற்பாடுசெய்யப்பட்டுள்ளது. (ச-20)




# எதிர்க்கட்சிகளின் கூட்டணி ஜனநாயகத்துக்கு விரோதம்

## சம்பிக்க ரணவக்க தெரிவிப்பு

**கொழும்பு, மே 21**

**உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பதற்கு எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து ஆரம்பிக்கப்படும் அரசியற்கூட்டணி தவறானது. அதில் நாம் பங்காளியாகமாட்டோம் என்று ஐக்கிய குடியரசு முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இந்தக் கூட்டணி ஜனநாயகத்துக்கு முரணானது. தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்ற உள்ளூராட்சிசபைகளில் அவர்களை ஆட்சியமைக்க இடமளிக்க வேண்டும்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஆளுங்கட்சியான தேசிய மக்கள் சக்திக்கு பெரும்பான்மை பலம் கிடைத்துள்ளது. மக்களாணைக்கமைய அந்தக் கட்சி உள்ளூராட்சிமன்ற அதிகாரசபைகளில் ஆட்சியமைக்க இடமளிக்கவேண்டும். அரசாங்கத்தை நெருக்கடிக்குள்ளாக்குகின்றோம் என்றுகூறி தேசிய மக்கள் சக்தியை நெருக்கடிக்குள்ளாக்கும் செயற்பாடுகளுக்கு நாங்கள் ஒத்துழைப்பு வழங்கப் போவதில்லை.

நாடாளுமன்றத்தின் அதிகாரத்தை மக்கள், தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியுள்ளார்கள். அதுபோலவே தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ள 265 உள்ளூராட்சிமன்றங்களில் ஆட்சியமைக்க இடமளிக்க வேண்டும்.

ஜனநாயக ரீதியில் மக்கள் ஆணை வழங்கியுள்ள தரப்பினர் ஆட்சியமைக்க இடமளிக்கவேண்டும். பலவந்தமான முறையில் மாற்றுக் கருத்துகளுக்கான கிடைத்த வாக்குகளை ஒன்றிணைத்து எதிர்க்கட்சி கூட்டணியமைப்பது சாத்தியமற்றது. தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் பின்னடைவை மீளாய்வு செய்ய வேண்டும் - என்றார். (எ-இ)

# திருவள்ளுவர் தினவிழா

யாழ்ப்பாணம், மே 21

அகில இலங்கை திருவள்ளுவர் மகாசபையின் ஏற்பாட்டில், திருவள்ளுவர்தின நிகழ்வு சபையின் தலைவர் ச.சாம்பசிவம் தலைமையில், உடுவிலில் உள்ள அவரது இல்லத்தில் எதிர்வரும் 25 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

சபையின் பொதுச் செயலாளர் க.சண்டேஸ்வரராஜா ஒழுங்கமைத்துள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக உடுவில் பிரதேச செயலாளர் ப.ஜெயகரன், கௌரவ விருந்தினராக உடுவில் சமூகசேவை உத்தியோகத்தர் த.றஜிந்தன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ச-25)

# இந்த ஆண்டில் மட்டும் 46 துப்பாக்கிச்சூடுகள்

## இதுவரை 41 துப்பாக்கிகள் பறிமுதல்

கொழும்பு, மே 21

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதும் 46 துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் நடந்துள்ளன என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் எஸ்.எஸ்.பி. புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

31 துப்பாக்கிச்சூடுகள் ஒழுங்கமைக்கப்பட்ட கும்பல்களால் திட்டமிடப்பட்டுள்ளன. இந்தத் துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் தொடர்பாக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றன. அவற்றுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

31 துப்பாக்கிச்சூடு சம்பவங்கள் தொடர்பாக இதுவரை 100க்கும் மேற்பட்ட சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். துப்பாக்கிச்சூடு சம்பவங்களுடன் தொடர்புடைய 27 கைத்துப்பாக்கிகள் மற்றும் ரி-56 ரகத் துப்பாக்கிகள் 14 உட்பட மொத்தமாக 41 துப்பாக்கிகள் பொலிஸாரால் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன - என்றார். (எ-இ)



# அரச அலுவலர்களின் பொறுப்பற்ற செயல்!

## யாரிடம் சென்று முறையிடுவது? வடமராட்சி மக்கள் விசனம்

யாழ்ப்பாணம், மே 21

வடமராட்சி கிழக்குப் பிரதேச செயலகம் முன்பாகவுள்ள குப்பைத்தொட்டியில் பிரதேச செயலக அலுவலர்கள் குப்பைகளை ஒழுங்கீனமாக வீசிச்செல்வதால் அப்பகுதியில் சுகாதாரச்சீர்கேடு ஏற்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். பிரதேச செயலகம் அமைந்திருக்கின்ற பகுதியில் மருத்துவமனை, உணவகங்கள், பொலிஸ் நிலையம், சமுர்த்தி நிலையம், வங்கி, பிரதேசசபை போன்றன காணப்படுவதால் அதிகளவான மக்கள் குறித்த இடத்துக்கு அடிக்கடி வந்து போகிறார்கள்.

குறித்த பகுதியில் உத்தியோகத்தர்கள் குப்பைகளை வீசிச்செல்வதால் கால்நடைகள் அந்தக் குப்பைத்தொட்டியை அலங்கோலம் செய்துவருகின்றன. இதனால் டெங்கு பரவும் அபாயமும் காணப்படுகின்றது.

அரச அலுவலர்களே இவ்வாறு சமூக அக்கறையற்றுச் சேவை புரிந்தால் நாம் யாரிடம் சென்று முறையிடுவது என்று அந்தப் பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர். (ச-22,27,113)

# வவு. சைவப்பிரகாச கல்லூரியில் அதிபர் நியமனத்தில் முறைகேடு!

## இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றச்சாட்டு

வவுனியா, மே 21

**வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியில் அதிபர் நியமனத்தில் முறைகேடு இடம்பெற்றுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.**

இது தொடர்பாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் வவுனியா கிளையினர் அனுப்பியுள்ள செய்தி அறிக்கையில்,

வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரிக்குப் புதிய அதிபர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனம் நேர்முகத்தேர்வு இன்றி வலயக் கல்விப் பணிப்பாளரின் சிபாரிசின் அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது. அதிபர் தெரிவுக்காக ஏற்கனவே இரண்டு நேர்முகத் தேர்வுகள் நடைபெற்ற நிலையில் அது தொடர்பான எந்தவிதமான வெளிப்படுதல்களும் இன்றி இந்த நியமனம் புதிதாக வழங்கப்பட்டுள்ளது.

முதற்தடவையாக நடைபெற்ற நேர்முகத்தேர்வின் முடிவுகள் அறிவிக்கப்படாமல் இரண்டாம் முறை நேர்முகத்தேர்விற்கான விண்ணப்பம் கோரி அதனையும் இழுத்தடித்தமையானது குறித்த அதிபரை நியமனம் செய்வதற்கான உள்நோக்கம் கொண்டதா? என எமக்கு சந்தேகம் எழுகின்றது.

தற்போதைய பிரதமர் அண்மையில் வவுனியாவில் கலந்துகொண்ட நிகழ்வொன்றில் கருத்துத் தெரிவிக்கும்போது பாடசாலைகளுக்கான அதிபர் நியமனங்கள் நேர்முகத்தேர்வின் அடிப்படையிலேயே வழங்கப்படும் எனக் குறிப்பிட்டிருந்தார். அந்தவகையில் இந்த நியமனம் முறைகேடான ஒரு விடயமாகும்- என்றுள்ளது. (ச-110)

# கொக்குத்தொடுவாயில் கசிப்புடன் ஒருவர் கைது

முல்லைத்தீவு, மே 21

கொக்குத்தொடுவாய் வடக்கு கொக்கிளாயில் ஆயிரம் மில்லிலீற்றர் கசிப்புடன் இளைஞர் ஒருவரைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

புலனாய்வு தகவலுக்கமைவாக வீடொன்றினை முற்றுகையிட்டு சோதனையிட்டபோது கசிப்புக் கைப்பற்றப்பட்டது.

மேலதிக விசாரணைகளின் பின் சந்தேகநபரை நீதிமன்றில் முற்படுத்தப் பொலிஸாரால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ச-125)

# சடலத்தை அடையாளம் காணுங்கள்

வவுனியா, மே 21

வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் ஏற்பட்ட விபத்தில் உயிரிழந்த பெண்ணின் சடலத்தை அடையாளங்காண உதவுமாறு வவுனியா பொலிஸார் கோரிக்கை விடுத்துள்ள னர்.

கடந்த 16ஆம் திகதி இரவு வவுனியா மூன்றுமுறிப்புப் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் 60 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவர் உயிரிழந்திருந்தார்.

குறித்த பெண்ணின் சடலம் வவுனியா பொதுமருத்துவமனையில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்த பெண் இதுவரை யாரென்று அடையாளங்காணப்படவில்லை. எனவே அவரது உறவினர்கள் யாரேனுமிருந்தால் வவுனியா தலைமை பொலிஸ் நிலையப் போக்குவரத்துப் பொலிஸாருக்குத் தகவல் வழங்குமாறு தெரிவித்துள்ளனர். (ச-41-110)



# பூநகரியில் டெங்கு ஒழிப்பு

பூநகரிப் பிரதேச செயலகத்தின் ஏற்பாட்டில், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களால் டெங்குக் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் பூநகரிப் பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இதன்போது நுளம்பு பெருகக்கூடிய பொலித்தீன், பிளாஸ்ரிக், ரயர்கள், போத்தல்கள் மற்றும் நீர் தேங்கக்கூடிய பொருள்கள் எனப் பெருமளவான கழிவுகள் சேகரிக்கப்பட்டு பிரதேசசபை கழிவகற்றல் வாகனங்கள் மூலம் அகற்றப்பட்டதுடன் மக்களை விழிப்பூட்டும் டெங்குக் கட்டுப்பாட்டு அறிவித்தல் ஆலோசனைகளும் ஒலிபரப்பப்பட்டன. (ச-25,9)

# கனியமணலகழ்வு முயற்சி; மன்னாரில் தடுத்துநிறுத்தம்

மன்னார்,மே 21

மன்னார் பேசாலை 50 வீட்டுத்திட்டக் கடற்கரையோரப் பகுதியில் தனியாருக்குச் சொந்தமான காணியில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கனிய மணலகழ்வுக்கான நில அளவைச் செயற்பாட்டை முன்னெடுத்தவேளை மன்னார் மாவட்ட பொது அமைப்புகள் ஒன்றியத்தின் தலையீட்டால் அந்தச் செயற்பாடு கைவிடப்பட்டது.

கொழும்பிலிருந்து வருகைதந்த நில அளவைத் திணைக்களத்தினர் குறித்த பகுதியை அளப்பதற்குரிய நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதுதொடர்பில் மன்னார் மாவட்டச் செயலரின் கவனத்துக்குக் கொண்டுசெல்லப்பட்டது. அதனையடுத்து குறித்த விடயம் தொடர்பாக இம்மாத இறுதியில் மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டு அதன் பின்னர் இந்த விடயம் குறித்துத் தீர்மானம் எடுக்கப்பட்டதன் பின்னர் குறித்த நடவடிக்கையை தொடர்வதா? இல்லையா என்பது குறித்து முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது. கொழும்பில் இருந்து வருகை தந்த நில அளவை திணைக்களத்தினர் குறித்த நடவடிக்கையை கைவிட்டுச் சென்றனர். (ச-22,56)



# களனி ரஜமகாவிகாரைக்கு பிரிட்டன் தூதுவர் விஜயம்!

கொழும்பு,மே 21

பிரிட்டன் தூதுவர் ஆண்ட்ரூ பேட்ரிக், வரலாற்றுச் சிறப்புமிக்க களனி ரஜமகாவிகாரைக்கு கடந்தவாரம் விஜயம் செய்துள்ளார்.

இதன்போது தலைமை மதகுரு வண. பேராசிரியர் கொள்ளுப்பிட்டியே மஹிந்த சங்கரக்ஹித தேரரைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

விகாரையின் வரலாறு மற்றும் கலாசார முக்கியத்துவம் என்பன குறித்து அறிந்து கொண்டார். (ச-33-125)



உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

நாளொரு நல்வார்த்தை

மனிதனின் குற்றங்களில் பெரும்பாலானவை அவனது நாவிலிருந்துதான் பிறக்கின்றன.

– நபிகள் நாயகம் –

# உரிமைக் கோரிக்கையும் இனவாதமா?

அதிகாரத்துக்காக வடக்கிலும், தெற்கிலும் மீண்டும் இனவாதம் தூண்டப்படுகின்றது என்று ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க கூறியிருக்கின்றார். இனவாதத்துக்கு இனி இடமில்லை என்று கூறியுள்ள ஜனாதிபதி, அதிகாரத்தைப் பெறுவதற்கும், குற்றங்களைமறைப்பதற்கும் போர்பயன்படுத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டிருக்கின்றார். ஆனால் தமிழ் மக்களின் அபிலாஷைகளை- நியாயமான கோரிக்கைகளை அவர் இனவாதமாக வகைப்படுத்துவாரானால், ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கமும் நாட்டின் கடந்தகால அரசாங்கங்களைப் போன்று பிழையான வழியிலேயே பயணிக்கின்றது என்றே கொள்ளவேண்டிருக்கும்.

இலங்கையில் உள்நாட்டுப்போர் ஏற்படுவதற்கு மூலகாரணமாக இருந்தது சிறுபான்மையினருக்கு எதிரான தெற்கின் இனவாதச் சிந்தனையே என்பதை எவரும் மறுக்க முடியாது. இனவாதச் சிந்தனையின் மேலாதிக்கத்தால், நாட்டின் சிறுபான்மையினரான தமிழ் மக்களை மீது பிரயோகிக்கப்பட்ட அடக்குமுறையே, தமிழ் மக்கள் ஆயுதப் போராட்டம் நோக்கி உந்தித் தள்ளியிருந்தது. தமிழ் மக்களின் நியாயமான அபிலாஷைகளை, இனவாதமாக தெற்கில் சித்தரித்து தெற்கு மக்களின் முன்பாக தமிழ் மக்கள் இனவாதிகள் என்ற பிம்பத்தைக் கட்டியெழுப்பி அதன்மூலம் ஆதாயம் தேடும் கைங்கரியத்தையே தெற்கு அரசியல்வாதிகள் இதுவரை காலமும் முன்னெடுத்திருந்தனர். உள்நாட் டுப் போர் பல தசாப்தங்கள் நீளவும் - நாட்டின் பொருளாதாரம் வங்குரோத்தை அடையவும் தெற்கின் அர சியல்தலைமைகளின் இந்தப் பொறுப்பற்ற செயற் பாடே காரணமாகவிருந்தது.

தற்போதும்கூட வடக்கு, கிழக்கில் தங்கள் பூர்வீகக் காணிகளுக்காகவும், பூர்வீக வழிபாட்டிடங்களுக்காகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்காகவும், அரசியற்கைதிகளுக்காகவும் தமிழ் மக்களால் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் - ஏன் தமிழ் மக்களின் இனப்பிரச்சினைத் தீர்வுக் கோரிக்கைகூடத் தெற்கில் இனவாதமாகவே சித்திரிக்கப்படுகின்றது. தெற்கின் இந்த ஆதிக்க மனப்பாங்கு - இனவாதச் சிந்தனையில் மாற்றம் ஏற்படும்வரையில் நாட்டில் எந்த ஆரோக்கியமான மாற்றமும் ஏற்படப்போவதில்லை. வடக்கு, கிழக்கு தமிழ் மக்களின் பூர்வீகத்தாயகம் என்ற உண்மையை ஏற்றுக்கொண்டு - தமிழ் மக்களின் கோரிக்கைகளில் உள்ள நியாயத்தன்மையைப் புரிந்துகொண்டு தெற்கு செயற்பட்டால் மட்டுமே நாட்டில் அமைதியும், நல்லிணக்கமும் நிலைபெறும் என்பதையும் ஆட்சியாளர்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதற்கு எந்வொரு தீர்மானமும் எடுப்பதற்குத் தயார் என்று கூறும் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழக்கமான தெற்கின் மனநிலையில் இருந்து வெளியே வந்து தமிழ் மக்களின் பிரச்சினைகளை அணுக முற்பட வேண்டும். தமிழ் மக்களின் நியாயமான கோரிக்கைகளை -போராட்டங்களை இனவாதமாக அவரும் கருதுவாரானால் நாட்டில் அமைதியையும், நல்லிணக்கத்தையும் ஏற்படுத்தக் கிடைத்திருக்கும் சந்தர்ப்பம் நிச்சயமாகத் தவறவிடப்படும் என்பதில் எந்த மாற்றுக் கருத்துகளும் இருக்கப்போவதில்லை. தமிழ் மக்களின் உரிமைக் கோரிக்கைகளுக்கும் இனவாதம் என்ற போர்வையைப் போர்த்தி - மலினப்படுத்தி தெற்கில் உள்ள இனவாதிகளைத் திருப்திப்படுத்தமுயலாது -அதன்மூலம் அரசியல் ஆதாயங்களைத் தேட முயலாது தீர்வுகளை நோக்கிய தற்துணிவான தீர்மானங்களை ஜனாதிபதி தலைமையிலான அரசாங்கம் எடுக்க வேண்டும். அதுவே அனைத்துக்குமான தீர்வாகவும் - நாட்டின் அமைதிக்கும், நல்லிணக்கத்துக்குமான வழியாகவும் இருக்கும்.

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com




# கடன் மறுசீரமைப்புத் திட்டத்தை முடிவுறுத்தப் பிரான்ஸ் தயார்



அந்த நாட்டுத்தூதுவர் தெரிவிப்பு

**கொழும்பு, மே 21**

**இலங்கைக்கும், பிரான்ஸுக்கும் இடையிலான இருதரப்புக் கடன்மறுசீரமைப்புச் செயன்முறையை இருதரப்பினரும் பயனடையக்கூடியவகையில் விரைவில் முடிவுறுத்துவதற்கு தமது அரசாங்கம் தயாராக உள்ளது என்று அந்த நாட்டுத்தூதுவர் ரெமி லம்பேர்ட் தெரிவித்துள்ளார்.**

இலங்கைக்கான பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் ரெமி லம்பேர்ட் மற்றும் வெளிநாட்டலுவல்கள், வெளிநாட்டு வேலைவாய்ப்ப மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித ஹேரத் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்றுமுன்தினம் கொழும்பிலுள்ள வெளிவிவகார அமைச்சில் நடைபெற்றது. அரசாங்கத்தால் தூரநோக்குச் சிந்தனையுடன் நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் பொருளாதார செயற்றிட்டங்களைப் பாராட்டிய பிரான்ஸ் நாட்டுத் தூதுவர், இராஜதந்திர விவகாரங்களில் இலங்கையுடன் இணைந்து ஒத்துழைப்புடன் பணியாற்றுவதற்குத் தயார் என்றும் தெரிவித்தார்.

இலங்கைக்கும், பிரான்ஸுக்கும் இடையில் முன்னெடுக்கப்பட்டுவரும் இருதரப்புக் கடன் மறுசீரமைப்பு செயன்முறையை விரைவாக முடிவுறுத்த வேண்டியது அவசியம் என பிரான்ஸ் நாட்டுதூதுவரிடம் வெளிவிவகார அமைச்சர் விஜித்த ஹேரத் சுட்டிக்காட்டியுள்ளார். அதற்குப் பதிலளித்த தூதுவர் ரெமி லம்பேர்ட், இருதரப்புக்கும் பயனடையக்கூடியவகையில் இந்தச் செயன்முறையை முடிவுறுத்துவதற்கு பிரான்ஸ் அரசாங்கம் தயாராக உள்ளது என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

# போதைப்பொருளுடன் 3 பெண்கள் கைது

கொழும்பு, மே 21

வெளிநாட்டிலிருந்து இலங்கை வந்த 3 பெண்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைதுசெய்யப்பட்டுள்ளனர். 120 மில்லியன் ரூபா பெறுமதியான குஷ் போதைப்பொருள் வைத்திருந்த குற்றச்சாட்டில் சுங்க அதிகாரிகளால் அவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கொலன்னாவப் பகுதியைச் சேர்ந்த 46 வயது தாயும் அவரது 18 வயது மகளும், வெல்லம்பிட்டியப் பகுதியைச் சேர்ந்த 56 வயது பெண் ஒருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். (ச-இ)

# சீரற்ற காலநிலையால் 187 குடும்பங்கள் பாதிப்பு

நாடு முழுவதும் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக 4 மாவட்டங்களில் 187 குடும்பங்களைச் சேர்ந்த 685 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

மன்னார், திருகோணமலை, புத்தளம் மற்றும் காலி மாவட்டங்களைச் சேர்ந்தவர்களே சீரற்ற காலநிலையால் பாதிக்கப்பட்டுள்ளனர். அதே வேளை, தற்போது பெய்துவரும் மழை காரணமாக இந்த மாவட்டங்களில் 17 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என்றும் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (எ-இ)



# முப்படையினருக்குப் பதவியுயர்வு!

கொழும்பு, மே 21

இலங்கையின் முப்படைகளிலும் பணியாற்றும் 12 ஆயிரத்து 434 பேருக்கு பதவி உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. 16ஆவது தேசிய போர்வீரர் நினைவு தினத்தை முன்னிட்டு இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது. ஆயுதப்படைகளின் தலைமைத்தளபதி என்ற அடிப்படையில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் ஒப்புதலுடன், இந்தப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன. (ச-இ)

**நாளை**

வியாழக்கிழமை- வைகாசி 08

22.05.2025

சுபநேரம் : 07.22- 08.52
ராகுகாலம் : 01.22 - 02.52

# 15 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
21 . 03 . 1937

ஆண்டவன் அடியில்
10 . 06 . 2010



**அமரர் சந்திரசேகரம் நடேசபிள்ளை**
(ஓய்வு நிலை அதிபர்-யா/சரசாலை சரஸ்வதி வித்தியாலயம்)

ஆண்டுகள் பதினைந்து கடந்தாலும்....
நெஞ்சத்தில் நீங்காத நினைவாய்....
கண்ணுக்கு ஒளியாய்....
நிலையாய் என்றும் எங்களோடு....
எங்களின் இறையாய்-என்றும்....
எங்களை தடம்மாறாமல் வழி நடத்த....
வணங்குகின்றோம் அப்பா....

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

நுணாவில் மேற்கு,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்

தோற்றம்
19 . 01 . 1959

மறைவு
17 . 05 . 2025



**நவரட்ணம் சரோஜா**

**(முன்னாள் புங்குடுதீவு நயினாதீவு பலநோக்குக் கூட்டுறவு சங்க கிளை முகாமையாளர், ஓய்வு நிலை உபதபால் அதிபர் மற்றும் புங்குடுதீவு. திருப்பெருந்துறை நாகதம்பிரான் ஆலய முன்னாள் தலைவர்)**

யாழ் புங்குடுதீவு 8ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நவரட்ணம் சரோஜா அவர்கள் கடந்த (17.05.2025) சனிக்கிழமை சிவனடி சேர்ந்தார்.

அன்னார் நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான (பிரபல வர்த்தகர் திருகோணமலை) கந்தையா - செல்வம்மா தம்பதியரின் புத்திரியும், காலஞ்சென்றவர்களான நாகராஜா - பாக்கியலட்சுமி தம்பதியரின் அன்பு மருமகளும், சுகவாணி (சுவிஸ்), சங்கீதா (பிரான்ஸ்), லக்சாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யசோ[illegible]ரன் (சுவிஸ்), தர்ஷன் (பிரான்ஸ்), பிரசாத் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், ஜெனிஷா, அனிசியா, அனி[illegible], சாயிசன், டர்வின், அர்வின், சர்வின், சர்விக், சஷ்வின், [illegible]ரா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு அன்பு பேர்த்தியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி, கந்தராசா, இந்திராணி தில்லைநாதன், மற்றும் பரமேஸ்வரி, கமலாதேவியின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான பரமநாதன், இராஜலெட்சுமி, கந்தசாமி, கந்தசாமி, மற்றும் கேதீஸ்வரி, சிவானந்தலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (21.05.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக வல்லன், நாமுண்டாமுனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

8ம் வட்டாரம்,
புங்குடுதீவு.

தகவல்:
குடும்பத்தினர்
+41 782 812 874, 070 434 9399

(CS/58313) J-1

# யானை தாக்கி ஒருவர் பலி!

வவுனியா, மே 21

வவுனியா, கண்ணாட்டி கணேசபுரம் பகுதியில் யானை தாக்கியதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

நேற்று இரவு குறித்த நபர் தனது வீட்டிலிருந்து அருகிலுள்ள கடைக்குச் சென்ற போது வீதிக்கரையில் நின்ற யானை அவரைத் தாக்கியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. சம்பவத்தில் கண்ணாட்டி கணேசபுரம் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் (வயது-63) என்பவரே உயிரிழந்தவராவார். சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ச-110)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்



**அமரர் சுப்பிரமணியம் ஆறுமுகசாமி**
21.05.2025 - புதன்கிழமை

ஆலமரமாய் விழுதுகள் பரப்பி நிழல்
கொடுத்து குடும்பத்தின் குல விளக்காகி
கணவன், தந்தை என்ற பாத்திரத்தை
தரமாக அலங்கரித்து சமூகத்தில் தரமான
மனிதனாய் வாழ்ந்த எங்கள் தெய்வம்
பறாளை முருகனின் திருவடியில்,
ஆறுதலடைய பிரார்த்திக்கின்றோம்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

மண்ணில் 29.07.1954
விண்ணில் 22.04.2025

சுழிபுரம் மத்தி,
சுழிபுரம்

குடும்பத்தினர்
077 181 5088, 075 117 8752

(CS 5836[illegible]) J-1

# முதலாம் ஆண்டு நினைவு நாள்

தோற்றம்
17 . 08 . 1936

மறைவு
21 . 05 . 2024



**அமரர் கி. ஜேசுராஜன்**
(ஓய்வு நிலை ஆசிரியர்
சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம்)

அன்னையின் அரவணைப்பில் வளர்ந்து
அனைத்து செல்வங்களையும் நிறைவாய்ப் பெற்று
கல்வியில் உயர்ந்த மனிதனாய் வாழ்ந்தீர்களே!
உடல் வருத்தம் பாராது
உண்மை உழைப்பில் உயர்ந்தீர்களே!
சோதனைகள் பல வந்தபோதும்
இறைவனில் அசையா நம்பிக்கை கொண்டு
ஆசீர்வாதப்பர் பாதம் நாடி
அவர் புதுமையை பறைசாற்றினீர்களே!
இல்லம் தேடி வருவோருக்கு
இல்லை என்று சொல்லாமல்
உதவிகள் செய்ய உம் கரங்கள் மறுத்ததில்லையே
இதயம் கூட இடைவெளி விட்டு துடிக்கும்
ஆனால் உங்கள் நினைவுகள் எங்கள்
மனதை விட்டு என்றும் பிரியாது ஐயா!

60, சென் பென்டிக்ற் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

(CS/58271) J-1

வாழ்க்கையின்
இரகசியங்களில் ஒன்று
என்னவென்றால்,
மற்றவர்களுக்காகச்
செய்கின்ற அனைத்து
செயல்களும் உண்மையில்
மதிப்புவாய்ந்தவையே
- ஹருகி முரகாமி

புதன் பொய்கை

21.05.2025
புதன்கிழமை

# பாடசாலைகளின் வெற்றிக்கு புத்தாக்கத் தலைமை மிகவும் அவசியம்

நடேசு தயாளன்
அதிபர்



இன்றைய உலகின் அடிப்படையான தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதில் பங்காற்றுக்கூடிய ஒன்றாக கல்வித்துறைசார் புத்தாக்கங்கள் விளங்குகின்றன. எதிர்காலக் கல்வியானது தொழில்நுட்ப சாதனங்களுடன் முற்றுமுழுதாக இணைந்துள்ளது. இதனால் கல்வியை மாற்றுவகையில் சிந்திக்கவேண்டியதேவை எழுந்துள்ளது. இத்தகைய சிந்தனை விருத்திக்கு புத்தாக்கத் திறன் என்பது அவசியமானது.

புத்தாக்கச் சிந்தனையானது கண்டுபிடித்த, பரிசோதனைகளை மேற்கொள்ளுதல் மற்றும் முன்னேற்றுவதற்கான நாட்டம் என்பவற்றினை உள்ளடக்கியதாகும். தனியாட்களும் நிறுவனங்களும் புத்தாக்கச் சிந்தனைக்கான தூண்டுதல்களை ஏற்படுத்துவனூடாக மாற்றங்களுக்குத் தம்மைப் பொருத்தப்பாடடையச் செய்யமுடியும் என்பதோடு வாய்ப்புகளைத் தோற்றுவிப்பதாகவும் போட்டித் தன்மைமிக்க இயங்கியல் ரீதியான சூழலை உருவாக்குவதாகவும் இருக்க முடியும்.

## புத்தாக்கம் என்பதென்ன?

புத்தாக்கம் என்பது புதுமை காணலும் அசலானதுமாகும். புதுமை காணும் திறனானது ஆபத்துகளை எதிர்கொள்ளும் நாட்டமுடையது. தவறுகள் ஏற்படுவதனை ஏற்பதாகவுமுள்ளது. ஏனெனில் முன்னோக்கிய நகர்வுக்குரிய வழியாகவே இது காணப்படுகின்றது. பிரச்சினைக்கான தீர்வுக்கு முன்னையவர்கள் சிந்தித்ததில் இருந்து மாற்றுவகையில் சிந்திப்பதனையே புத்தாக்கம் ஏற்கிறது. புத்தாக்கத் திறமைமிக்க பாடசாலைத் தலைமைத்துவத்திற்கு உரித்தானவர் நெகிழ்வான போக்குடையவராகவும் சிறந்த வளவாளராகவும் விளங்குதல் வேண்டும். தான் சார்ந்தவர்கள் அனுபவங்களைப் பெற்றுக்கொள்வதற்கும் வாய்ப்பளிக்க வேண்டியது அவசியமானது. புத்தாக்கத் திறன்மிக்க பாடசாலையொன்றின் ஆளணியினரின் செயற்பாடானது பாடசாலை அதிபரது தலைமைத்துவப் பாங்கிலேயே தங்கியுள்ளது.

## புத்தாக்கத்தின் பயன்கள்

பல்பரிமாணம்மிக்க சவால்களை வெற்றிகொள்ள வேண்டிய திறன்மிக்கவர்களை உருவாக்கவேண்டியநிலையில் இன்றைய கல்விச் செயன்முறை காணப்படுவதினால் புத்தாக்கத்திறன்மிக்க பாடசாலைத் தலைமைத்துவமானது இன்று அவசியமானதாகவுள்ளது. இதன்மூலம், எதிர்பார்க்கப்படும் தரமான கல்வியைப் பெற்றுக்கொள்ள முடியும். கல்விச் செயன்முறையினூடாக உள்ளார்ந்த திறன்களை வெளிக் கொண்டுவருவதற்குப் புத்தாக்கச் செயற்பாடுகள் இடம்பெறுவது உறுதிப்படுத்தப்பட வேண்டும். பாடசாலையானது புத்தாக்கத்திறனுடைய தலைமைத்துவத்தினால் வழிநடத்தப்படுகின்றபோது அது சமூகத்தில் புலக்காட்சிமிக்கதாகவும் மாற்றமடையும். சவால்களை வெற்றிகொள்ளும் இயலுமைகளை தோற்றுவிப்பதோடு பிரச்சினைகள் மற்றும் அதற்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் முன்னோக்கிச் சிந்திப்பதற்கான செயற்பாடுகளைத் திட்டமிடுவதும் புத்தாக்கச்சிந்தனையாகும். புதிய பிரச்சினைகளைத் தோற்றுவித்து நியமங்களை உருவாக்குவது என்பவற்றினூடாக சேர்ந்து இயங்கி நன்நிலை அடைவது அவசியமானதாகும். எல்லையற்ற ஆக்க மலர்ச்சியானது புத்தாக்கச் சிந்தனைக்கான அடிப்படையாகும். ஆக்கமலர்ச்சிச் சிந்தனையானது வரையறுக்கப்பட்ட எல்லைக்கப்பாலும் சிந்தனையை நீட்சியடையச் செய்து புதிய எண்ணப்பாடுகளைத் தோற்றுவிக்கின்றது. இதனூடாக உள்ளாந்தப் பெறுமானங்களை மேலேழச் செய்து பாடசாலை வடிவமைப்பினை மாற்றியமைக்கமுடியும்.

## புத்தாக்கத் திறனுடைய அதிபர்

புத்தாக்கத்திறனுடைய அதிபரானவர் பாடசாலைகளின் செற்பாடுகளில் மாற்றத்தினை ஏற்படுத்துவது மட்டுமல்ல அதற்குப் பொருத்தமான உள்ளீடுகள் கருவிகளைப் பயன்படுத்தும் திறனுடையவராகவும் விளங்குதல் வேண்டும். புத்தாக்கச் செயன்முறை வெற்றியடைவதற்காக ஊக்குவிப்புக்களைப் போதுமான அளவில் வழங்குதல், வளங்களைத் திரட்டுதல், வேலைச்சுமையை இலகுபடுத்துதல், சுதந்திர உணர்வினை ஏற்படுத்துதல் ,கடமை கூறுகளைச் சவாலாக ஏற்றுக்கொள்ளுதல், குழு உணர்வு கூட்டுணர்வுச் செயற்பாடுகள் என்பன ஏற்படுத்தப்பட வேண்டும். உச்சமட்டத்திலான வெளியீடுகளைப் பெற்றுக்கொள்வதனை நோக்கமாகக் கொண்டு செயலணி உருவாக்கத்தினைத் மேற்கொள்ளவும், வகைகூறலை மேற்கொள்ளவும், புத்தாக்கச் செயன்முறையினைத் தூண்டுவதற்கான வழிவகைகளைப் பாடசாலைக்குள் மேற்கொள்ளவேண்டும்.



இது தவிரப் பாடசாலையினுள் அதிக அழுத்தம் தரும் செயற்பாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். பாடசாலை ஆளணியினரிடம் புத்தாக்கத்திறனினை வளர்ப்பதற்குச் சிந்தனைக் கிளறல் முறையினைப் பயன்படுத்துதல், கூட்டிணைவான வேலைச் சூழலினைத் தோற்றுவித்தல், ஆசிரியர்களிடையே ஆச்சரியத்தினை ஏற்படுத்தத்தக்க வகையிலான நிகழ்வுகளை ஒழுங்குபடுத்துதல், திறந்த கருத்தாடல்களுக்கான வாய்ப்பினை ஏற்படுத்துதல் என்பவற்றில் கவனம் செலுத்துதல் அவசியமானதாகும். புத்தாக்கத்துக்கு விமர்சனச் சிந்தனை என்பது மிக அவசியமானதாகும். தனியாட்களை வலுவூட்டுவதனூடாகக் கிடைக்கப்பெறும் தகவல்களை அவ்வாறே ஏற்றுக்கொள்வதில் இருந்து விடுபட்டு ஆதாரபூர்வமான விமர்சனங்களுடன் சரியான நிலையில் நோக்கி பலம், பலவீனங்ளை அறிந்து தீர்வுகளை முன்வைப்பதற்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். சிறந்த வேலைச் செயற்பாடுகளை வடிவமைத்தல், சுயமுகாமைக்குட்பட்ட அணி உருவாக்கம், மனிதர்களை மையப்படுத்திய தொழில்நுட்ப அணுகுமுறைகள், ஆசிரியர்களைப் புத்தாக்கம் நோக்கி நெறிப்படுத்துதல் என்பன பாடசாலைத் தலைமைத்துவத்தினால் தோற்றுவிக்கப்படுதல் அவசியமானது. இதன்மூலமே இருபத்தோராம் நூற்றாண்டுக்கான திறன்களைப்பெற்ற சமூக உறுப்பினர்களைப் பாடசாலையின் வெளியீடாக உருவாக்கமுடியும்.

# போர்த்துக்கேயப் படைகளை பதறவிட்ட

# மாவீரன் இரண்டாம் சங்கிலியன்

■ எம்.பி ஸ்ரீந்திரன்
யாழ்.சங்கிலியன் மன்றம்
செயலாளர்

தொன்மையும், சிறப்பும்மிக்க தமிழ் மன்னர் பரம்பரையில் வந்துதித்த வீரமறவனே! இரண்டாம் சங்கிலியன். யாழ்ப்பாண இராச்சியத்தின் இறுதி சைவத்தமிழ் மன்னன். 7ஆம் செகராஜசேகரன் என்ற சிறப்புப்பெயரைக் கொண்டவன். கி.பி. 1519 - கி.பி. 1561 வரை யாழ்ப்பாண இராச்சியத்தை ஆண்டவன். 6ஆம் பரராஜசேகரனுக்கும் மங்காத்தாளுக்கும் மகனாகப் பிறந்தவன். ஆரியச்சக்கரவர்த்திகள் வம்சத்தில் வந்துதித்தவன். நெற்றி நிறைந்த திருநீறும், நிமிர்ந்த உரம்மிக்க நெஞ்சும், கையினில் வீரவாளும், கண்களில் ஒளியும், கம்பீரத்தோற்றமும் கொண்டவன். நல்லாட்சி நாதனாக விளங்கியவன். வலிமைமிக்க காலாட்படை, கடற்படை வைத்திருந்தவன். கடல் கடந்த வணிகத்தில் கொடிகட்டிப் பறந்தவன். நிறைந்த செல்வம்





பெற்றிருந்தவன். போர்த்துக்கேயரின் வணிக முயற்சிகள் நாட்டு நலனுக்குப் பாதகமானது என்பதை அறிந்திருந்தவன்.

இதன் காரணமாக கி.பி 1540 களில் போர்த்துக்கேயப் பறங்கிப்படைகளின் கப்பல், யாழ்ப்பாணத் துறைமுகத்திற்கு வந்தவேளை, படைகளை அனுப்பி, கப்பலையும் பொருள்களையும் பறிமுதல் செய்தவன். பறங்கிப் படைகளை ஓட ஓட விரட்டியவன். இந்தப் படை நடவடிக்கை மூலம் பறங்கிப்படைகளின் வணிகத்திற்கும் மதமாற்ற நடவடிக்கைகளுக்கும் சிம்ம சொப்பனமாகத் திகழ்ந்தவன். பிரான்சிஸ் சவேரியார் பாதிரியாரும், குறோஸ் பாதிரியாரும் மேற்கொண்டிருந்த, சைவர்களை கத்தோலிக்கராக மதம் மாற்றும் நடவடிக்கைகளுக்கு, படைகொண்டு பதில் சொல்லி ஓட ஓட விரட்டியவன். சங்கிலி மன்னன் வீரத்திற்கு முன்னால், பறங்கிப் படைகள் நிற்கமுடியாமல் ஓடியொளித்தன. சங்கிலி மன்னனுக்கு மதம் மாற்றிய பாதிரிமார் இருவரும் பகையாளியாகினர். யாழ்ப்பாண வரலாற்றை பின் நாளில் குறித்துவைத்துள்ள இப் பாதிரிமார், சங்கிலியனின் வீர பிரதாபங்களை மறைத்துவைத்துள்ளனர். மாவீரன் சங்கிலியனை மாவீரனாகக் காட்டாது வரலாற்றைத் திரிபுபடுத்தி எழுதிவைத்துள்ளனர். கி.பி 1544 இல் இந்தப் பாதிரிமார் இருவரதும் தூண்டுதல் காரணமாக மன்னாரில் வாழ்ந்த சைவ மக்கள் நூற்றுக்கணக்கானோர், கத்தோலிக்கர்களாக மதம் மாற்றப்பட்டிருந்தனர். இதையறிந்த 2ஆம் சங்கிலிய மன்னன் படையனுப்பி மதம் மாறியவர்களைத் தண்டித்திருந்தான். இச் சம்பவத்துடன் யாழ்ப்பாண அரசு பறங்கிப் படைகளுக்கு எதிராக எழுச்சி பெற்றிருந்தது. இந்தப் பேரெழுச்சிக்குத் துணையாக, சிங்கள மன்னன் மாயாதுன்னை மாவீரன் சங்கிலியனுடன் கைகோர்த்து நின்றான். போர்த்துக்கேயப் பறங்கிப்படைகளை யாழ்ப்பாணத்தில் நிலைகொள்ளவிடாது கடும் பிரயத்தனங்களை எடுத்திருந்தான். கி.பி 1545 ஆம் ஆண்டு சீதாவாக்கை, கண்டி இராச்சியங்களுடன் தொடர்புகளைப் பேணியிருந்தான். போர்த்துக்கேயப் படைகளுக்கு எதிராகப் படையனுப்பி உதவிசெய்திருந்தான். சைவத்தமிழ் மன்னன் இரண்டாம் சங்கிலியன் பறங்கிப் படைகளை ஓட ஓட விரட்டியடித்திருந்தான் என்பதை எடுத்துக்காட்டுவதாக, நல்லூர்வீரமாகாளியம்மன் ஆலயத்தில் அமைந்திருந்த வயல் வெளியில் பத்து நாள்கள் நடந்திருந்த வாற்போர் அமைந்துள்ளது. இப்போரில் 1700 இற்கும் மேற்பட்ட பறங்கிப்படைகளின் தலைகள் வெட்டித் தரையில் சாய்க்கப்பட்டிருந்தன. இதைக்கண்ட பறங்கிப்படைகள் கதிகலங்கி சிதறி ஓடித் தப்பின. உயிரைக் காக்க மாவீரன் சங்கிலியனிடம் சரன்புகுவதற்குத் தயாராகவிருந்தன. 11ஆம் நாள் மாவீரன் சங்கிலியன் 400 பேரைக் கொண்ட படைவீரர்களுடன் மேலும் முன்னோக்கி சென்றிருந்தான். அவ்வேளை தரங்கமாபாடியிலிருந்து துணைப்படைகள், பறங்கிப் படைகளுக்கு உதவிக்கு வர, அவர்கள் உற்சாகமடைந்து போராடத் தயாரானார்கள். அவ்வேளை நயவஞ்சகம்மிக்க காக்கை வன்னியன், சங்கிலி மன்னனுடன் நட்புப் பூண்டு, காட்டிக்கொடுத்து, பறங்கிப்படைகளிடம் வெகுமதிகளைப் பெற்றுக்கொண்டான்.

மாவீரன் சங்கிலியன் சிறைப் பிடிக்கப்பட்டான் கோவா கொண்டுசென்று தூக்கிலிடப்பட்டான். மறைந்தான் மாவீரன். வீழ்ந்தது யாழ்ப்பாண இராச்சியம். ஆண்டனர் பல நூறு வருடங்கள் அன்னியர். வீரபாண்டிய கட்ட பொம்மனுக்கு நிகராகச் செயற்பட்டுத் தமிழையும் சைவத்தையும் கட்டிக்காத்த சங்கிலி மன்னன் புகழ் பாடுவோம். அவனது வீரம் செறிந்த வரலாற்றை அடுத்த சந்ததிக்கு எடுத்துச்செல்வோம். ஆண்ட பரம்பரை மீண்டும் ஆள அடுத்த சந்ததியினரைத் தயார்ப்படுத்துவோம்.




இயற்கையின் சமத்துவமாம்
இழந்தால் பெற முடியா
ஈடற்ற காலம் என்றும்
பொன்னிலும் பொக்கிசமே...!

நல்ல காலம் வருமென்று
நம்பி வெம்பும் தோழர்களே!
நல்ல காலம் இதுவென்று
நடை பயில வேண்டாமோ?

வெட்டிப் பேச்சுகளும்
வாட்டும் செயலும் விட்டு
எடுத்த இப் பிறவியிலே
எட்டுவீர் சிகரங்களை..!

சூரிய நாயகனை
சுற்றி வரும் கோள்கள்போல்
வீரியமாய் கடமை வழி
காரியங்கள் முடித்திடுவீர்...!

இரா.ஜெயக்குமார்

# 2 ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவுதினம்



யாழ்ப்பாணத்தை ஆட்சி செய்த 2 ஆம் சங்கிலிய மன்னனின் 406 ஆவது நினைவுதினம் நேற்று செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாணத்தில் நினைவுகூரப்பட்டது.

யாழ்ப்பாணம் பருத்தித்துறை வீதி செம்மணிச் சந்தியிலுள்ள சங்கிலிய மன்னன் சிலைக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு அஞ்சலிசெலுத்தப்பட்டது.

இதன்போது 2ஆம் சங்கிலிய மன்னனின் வரலாற்றுக் குறிப்புகள் அடங்கிய நூலொன்றும் வெளியிட்டு வைக்கப்பட்டது. சிவசேனையின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் மருதனார் மடம் ஆஞ்சநேயர் கோவில் ஆதீன கர்த்தா சிவஸ்ரீ சுந்தரேஸ்வரக் குருக்கள், இந்திய துணைத்தூதரக அதிகாரி நாகராஜன், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம், யாழ். மாநகர ஆணையாளர் ச.கிருஷ்ணேந்திரன், மதத்தலைவர்கள், வர்த்தகர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (ச-20)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு
## 2025 ஆம் ஆண்டிற்கான மத்திய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் மத்திய பேரூந்து நிலைய வீதியில் அமைக்கப்பட்ட கடைகளை 2025 ஆம் ஆண்டு தொடக்கம் நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-21.05.2025 முற்பகல் 9.00 மணி தொடக்கம் 12.06.2025 பி.ப 02.00 மணி வரை (அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-13.06.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 13.06.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப் படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| முல்லைத்தீவு உப அலுவலகம் | | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 2 | கடை இல - 02 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 3 | கடை இல - 03 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 4 | கடை இல - 04 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 5 | கடை இல - 05 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 6 | கடை இல - 06 | 2,000.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 7 | கடை இல - 07 | 2[illegible]0.00 | 19,200.00 | 8,000.00 | **1,920,000.00** |
| 8 | கடை இல - 08 | 2[illegible]0.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 10 | கடை இல - 12 | 2[illegible]0.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 11 | கடை இல - 15 | 2[illegible]0.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இ[illegible]ல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் த[illegible]ந்து மூலப்பிரதியை தலைவர்/செயலாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்[illegible] இட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் மத்திய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்ட கடை இல [illegible] என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 13.06.2025 முற்பகல் 10 மணிக்கு முன் [illegible]க்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப் புற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்[illegible] வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கில[illegible]டும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்க[illegible]ாமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறை[illegible] பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளிக்க வேண்டும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராக[illegible]க்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படமாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது ி[illegible]ிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப்பட மாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வ[illegible] உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கு மாதாந்[illegible]டகையாக பிரதேச சபையினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்தப்படல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள், அறிவுறுத்தல்களி[illegible]யாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்[illegible]க்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்[illegible]க்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்[illegible]ற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு[illegible]ளிக்கப்படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்[illegible]ப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப[illegible]ரிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த [illegible] மாற்றங்கள், புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
11. தங்களால் நடத்த உத்தேசிக்கப்படும் வியா[illegible]ன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
12. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகார[illegible]வறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத்தொகைகள் மீளளிப்பு செய்யப்படமா[illegible]துடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
13. சபையின் தலைவரின்/செயலாளரின் இந்[illegible] தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக தலைவருக்கு / செயலாளருக்கு எதிராக நீத[illegible]மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
14. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்கை[illegible] சபையின் தலைமை அலுவலகத்தில் 021 2290001 என்ற அலுவலக தொலைபேசியில் அலுவலக நேரத்தில் தொ[illegible]ண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை,**
**முல்லைத்தீவு.**

20.05.2025

# மரண அறிவித்தல்

**தோற்றம்**
11
04
1940



**மறைவு**
19
05
2025

## திருமதி.
## பகவதியம்மா மார்க்கண்டு (பூமணி)

சாவகச்சேரி நுணாவில் மேற்கை பிறப்பிடமாகவும், கொழும்பு வெள்ளவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட பகவதியம்மா (பூமணி மார்க்கண்டு) அவர்கள் **19.05.2025** திங்கட்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம் மார்க்கண்டுவின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான மாணிக்கம் - நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான மயில்வாகனம்-பொன்னம்மா தம்பதியினரின் ஆசை மருமகளும், சாந்தினி (கொழும்பு), ராஜ்குமார் (கனடா), கோகிலகுமார் (Marks Enterprises-Colombo-11), உமாலினி (கனடா), நந்தகுமார் (கனடா, Tesco Trade Center-Colombo-11), கிருஸ்ணகுமார் (லண்டன்) ஆகியோரின் அன்புத் தாயும், கெங்கநாதன் (ஓய்வுபெற்ற தொழிநுட்பவியலாளர்- சாவகச்சேரி), ரேவதி (கனடா), கவிதா (ஆசிரியை-C/St Mary's T.M.V), தயாளன் (கனடா), சுபாஷினி (கனடா), சிவானி (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும், ஜெய்சன், சரண்யா, அபிவர்ணா, வாசுதன், ஜனனி, சிவானி, துளசி,தக்ஷனா, சுலோஜன், மயூரி, வர்மன், கர்சா, தன்யா, மதுராங்கி, மிவியா, ஹரீஷ் ஆகியோரின் அன்புப்பேத்தியும், வைஷாலி, விஹானா, சத்திசா, ஷயோன் ஆகியோரின் பூட்டியும், சுந்தரலிங்கம், சிதம்பரநாதன், திலகவதி (ரதி), காசிநாதன், யோகநாதன், யோகேஸ்வரி (துங்கம்), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, கமலாம்பிகை (கமலா) ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் **21.05.2025** புதன்கிழமை முற்பகல் **11.00** மணிக்கு,இல - **16 B,** அலெக்ஸ்ஸாந்திரா வீதி, வெள்ளவத்தை அன்னாரின் இல்லத்தில்பார்வைக்காக வைக்கப்பட்டு, **22.05.2025** வியாழக்கிழமை அன்று முற்பகல் **11.00** மணி முதல் இறுதிக்கிரிகைகள் நடைப்பெற்று, பிற்பகல் **2.00** மணியளவில் பொரளை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

**இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.**

தகவல்:
குடும்பத்தினர் **0779082304 (மகன்)**

# தேசம் கடந்தும் கேட்கும் நீதிக்கான குரல்!

கவிமாறன்



தமிழினப்படுகொலை நினைவாலயம், கனடா பிரம்டன்

'இந்தமுறை வழமையைவிட முள்ளிவாய்க்காலில நிறையச் சனம். போனமுறை எலக்சனோட எங்கட சனத் திட்ட இருந்த இனவுணர்வு இல்லாமல் போட்டுதோ எண்டு பயந்தன். ஆனால் எங்கட சனம் தெளிவாத்தான் இருக்குது' முள்ளிவாய்க்கால் மண்ணில் நடந்த நினைவேந்தலுக்குச் சென்று வந்த நண்பரொருவர் இப்படிச் சிலாகித்திருந்தார். அவர் சொல்வதும் உண்மைதான். எந்த நேரத்தில் எதைச் செய்யவேண்டுமென எங்கள் மக்களுக்கு நன்கு தெரியும். ஏனென்றால் அவர்கள் முப்பது வருடங்களுக்கும் மேலாக விடுதலைப்புலிகளின் ஆளுகைக்குள் இருந்தவர்கள். போர்க்காலத்தில் எப்படி தற்காத்துக்கொள்வது என்பதில் இருந்து எமது சுயசார்புப் பொருளாதாரத்தைக் கட்டமைப்பது வரை அத்தனை நுணுக்கங்களையும் புலிகள் மக்களுக்கு புகட்டியிருந்தார்கள். அந்த முப்பது வருட அனுபவத்தில் எங்களின் உயிரணுக்களில் ஒட்டிக் கொண்ட விடுதலையுணர்வை இனிமேல் காலாதி காலத்துக்கும் எவராலும் பிரிக்க முடியாது. இதனையே 16 வருடங்கள் கழிந்துவிட்ட இனவழிப்புக்கு நீதிகோரி முள்ளிவாய்க்காலில் திரண்டவர்களின் குரல் சொல்கிறது.



பிரிட்டனில் நடந்த புலம்பெயர் தமிழர்களின் ஆர்ப்பாட்டம்

முள்ளிவாய்க்காலில் மட்டுமா எம்மவர்கள் திரண்டார்கள்? எங்கெல்லாம் ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்து சிதறி வாழ்கின்றனரோ, அங்கெல்லாம் இனவழிப்புக்கு நீதிகோரி பெரும் நினைவேந்தல்களும் போராட்டங்களும் நடந்தேறியுள்ளன. அதிலும் குறிப்பாக கனடாவின் பிரம்டன் நகரில் அமைக்கப்பட்ட தமிழினப் படுகொலை நினைவாலயம் , இம்முறை மே 18 ஆம் திகதி மிகப்பெரும் கவனவீர்ப்பு மையமாக மாறி, உலகெங்கும் உள்ள தமிழர்கள் திரளும் இடமாகிவிட்டது. மே 18 ஆம் திகதி அங்கு செல்வதென்பது இனிவரும் காலங்களில் புலம்பெயர் தமிழர்களின் கட்டாயக் கடமையாகவும் மாறக்கூடும். ஆனால் இந்த நினைவாலயம் திறக்கப்பட்டமை கனடாவில் உள்ள புலம்பெயர் சிங்கள மக்களுக்கு வயிற்றெரிச்சலைக் கிளப்பியுள்ளதுடன், இலங்கை அரசாங்கத்துக்கும் பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஏற்கனவே தமிழகம்,மொரீசீசியஸ் போன்ற இடங்களில் முள்ளிவாய்க்கால் நினைவைச்சொல்லும் தூபிகள் இருப்பதைப்போல கனடாவிலும் நினைவாலயம் முளைத்திருப்பது பேரினவாத அரசுக்கு சினமூட்டவே செய்யும். இனிவரும் காலங்களில் கனடாவைப் பின்பற்றி ஏனைய புலம்பெயர் தேசங்களிலும் முள்ளிவாய்க்கால் தூபி முளைப்பதற்கான சந்தர்ப்பங்களும் அதிகம். குறிப்பாக பிரிட்டனில் நினைவேந்தலில் கலந்துகொண்டவர்கள் அரசின் அனுமதி பெற்று, லண்டன் நகரிலும் ஒரு நினைவுத் தூபியை அமைப்பதென முடிவு செய்துள்ளனர். அடுத்த முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கு முன்னர் இந்தத் தூபியும் அமைக்கப்பட்டுவிடுமென நம்பலாம். கனடா, நோர்வே, பிரிட்டன், பிரான்ஸ், நெதர்லாந்து, சுவிஸ் போன்ற பல நாடுகளிலும் மே 18 ஆம் திகதி நூற்றுக்கணக்கானோர் ஒன்று திரண்டு 'எமக்குத் தேவை இனவழிப்புக்கு நீதியே!' என்று கோஷமிட்டு, கவனவீர்ப்புப் போராட்டங்களிலும் ஈடுபட்டனர். நடன அஞ்சலிகளும் உயிர்மாண்டோருக்காக செய்யப்பட்டன. தேசங்கள் கடந்தபோதும், எங்கள் உணர்வுகள் இன்னமும் தாயகத்திலேயே இருக்கின்றன என்பதையும், நீதிக்கான தங்கள் குரல் ஓயாது என்பதையும் புலம்பெயரிகள் உணர்த்தியிருக்கிறார்கள். சிறுபொறிதான் பெருந்தீயாகும். இப்படி வெவ்வேறு தேசங்களில் நிகழும் போராட்டங்கள் ஒருநாள் ஒன்றாகி, பெருங்குரலாகி எம் மக்களுக்கு முள்ளிவாய்க்காலில் இழைக்கப்பட்ட அக்கிரமங்களுக்கெல்லாம் தீர்ப்பெழுதியே தீரும்.



ப. விதுர்ஷினி
கிழக்குப் பல்கலைக்கழகம்

# ஒரு சிரிப்பின் பின்னே....

முகத்தில் புன்னகை,
உள்ளத்தில் பல முடிச்சுகள்,
சிறுவயதில் பொம்மையோடு
விளையாடினாள்,
இப்போது வாழ்க்கையோடு
போராடுகிறாள்.

வாழ்க்கை தொடங்கும் வயதில்,
தன்னை மறந்து,
குடும்பத்தைச் சுமக்கும்
தோளாகிறாள் பெண்.
"இது உன் பொறுப்பு"
என்ற வார்த்தை,
அவள் பிறந்த நாளிலிருந்தே
இணைக்கப்பட்ட சொல் போல.

காதலில் கவிதை தேடினாள்
ஆனால்,
வரிகள் இல்லாத நூலில்,
கண்ணீரால் எழுதினாள்.

வெளியே சிரிக்கிறாள்,
உள்ளே அழுகிறாள்.

ஏமாற்றங்கள் பல
தொட்டாலும்,
சிரிப்பால் அதை
மறைக்கிறாள்....

அவளுக்கு அமைதி
தேவை இல்லை,
அமைதியில்தான்
சத்தமில்லா கண்ணீரை வடிக்கிறாள்.
பொருத்தமில்லா பல ஆசைகள்,
பார்வைகள், மௌனங்கள், கேள்விகள்,
அவளுக்கே வழக்கம்....

சமூகத்தின் பேச்சு
அவளுக்குச் சுற்றுவேலி,
அதைக் கடந்து, தனக்கான பாதையை
உருவாக்குவாள் பெண்.

தன் தேவைக்கு
நேரமில்லை என்கிறாள்,
பிறர் தேவைக்கு
நேரம் ஒதுக்குகிறாள்.
கண்ணாடியில் தோன்றும்

அவள் முகம்
அவளுக்கு அழகில்லை
அத்தனை வலிகள்
அந்த முகத்தில்

அவளுக்குள் ஒரு கனவு,
அவளுக்குள் ஒரு காதல்,
அவளுக்குள் ஓர் ஆசை,
அவளுக்குள் ஓர் இலட்சியம்,
அவளுக்குள் ஓர் எதிர்பார்ப்பு,
அவளுக்குள் ஓர் ஏக்கம்,
அவளுக்குள் ஒரு வலி,
ஆனால் உலகுக்கு அவளோ
வெறும் பெண்...

மறைக்கிறாள்...
ஆம் மறைக்கிறாள்
உண்மைகளை மறைக்கிறாள்,
வலிகளை மறைக்கிறாள்,
ஏமாற்றங்களை மறைக்கிறாள்,
ஒரு சிரிப்பின்
பின்னே மறைக்கிறாள்......



# நாட்டைக் காக்கவே போரை நடத்தினோம்

## மஹிந்த தெரிவிப்பு

நாட்டை விடுவித்து நிலையான அமைதியை நிலைநாட்டுவதற்காகவே தமது அரசாங்கம் போரை நடத்தியது என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

நேற்று படைவீரர் நினைவுச்சின்னத்திற்கு அருகில் நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் படைவீரர் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார்.

எனது அரசாங்கம் அமைதிக்காகப் போரை நடத்தியது. நாட்டைப் பாதுகாக்க நாங்கள் போரை நடத்தினோம். யாரையும் பிடிப்பதற்காக அல்ல.

எதிர்காலத்தில் இவை மீண்டும் நடைபெறுமா? இல்லையா? என்பதைச் சொல்ல முடியாது. அது வரும் அரசாங்கங்களைப் பொறுத்தே தீர்மானிக்கப்படும். யுத்தம் என்பது ஒரு துயரச் சம்பவம். ஆனால், எங்கள் இராணுவம் அதில் வெற்றியும் பெற்றது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

# மருத்துவர் முஹைதீன் கொலை; புளொட் நெடுமாறன் விடுதலை!

வவுனியா, மே 21

வவுனியாவில் மருத்துவர் முஹைதீனை சுட்டுப்படுகொலை செய்த வழக்கில் மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த, நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் மேன்முறையீட்டு நீதிமன்றத்தால் விடுவிக்கப்பட்டுள்ளார்.

2009ஆம் ஆண்டு 4ஆம் மாதம் 20ஆம் திகதி வவுனியா கற்குழியில் அமைந்துள்ள தனியார் மருத்துவமனையில் வைத்து, மருத்துவர் சுல்தான் முஹைதீன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார். இந்த வழக்கில் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினரான நெடுமாறன் என்று அழைக்கப்படும் சிவநாதன் பிரேமநாத் மீது வவுனியா மேல்நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டது.

நீண்ட விசாரணைகளின் பின்னர் கடந்த 2023ஆம் ஆண்டு ஜூன் 8ஆம் திகதி, அப்போதைய வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதியான மா.இளஞ்செழியன் சந்தேகநபருக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பளித்தார்.

இந்தத் தீர்ப்புக்கு எதிராக நெடுமாறன் தரப்பில் மேன்முறையீடு செய்யப்பட்டது. கௌரி சங்கரி சட்ட நிறுவனத்தால் தொடுக்கப்பட்ட இந்த மேன்முறையீட்டு வழக்கு, மேன் முறையீட்டு நீதிமன்றின் நீதிபதிகளான சசி மகேந்திரன், அமல்ரட்ணராஜா ஆகியோர் அடங்கிய அமர்வின் முன்பாக நேற்றுத் தீர்ப்புக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. நெடுமாறனின் தரப்பில், ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, ஜனாதிபதி சட்டத்தரணி அனில் சில்வா ஆகியோர் முன்னிலையானார்கள்.

இதன்போது, குற்றவாளிக்கு எதிராக வவுனியா மேல்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பை மாற்றிய மேன்முறையீட்டு நீதிமன்றம், குறித்த மனுதாரரை வழக்கில் இருந்து முழுமையாக விடுவித்து உத்தரவிட்டுள்ளது. மனுதாரருக்கு எதிரான குற்றச்சாட்டுகள் சந்தேகத்துக்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்படவில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது. (ம-110)

# மரண அறிவித்தல்

தோற்றம்
08 . 04 . 1937



மறைவு
19 . 05 . 2025

## இராமச்சந்திரன் மகேஸ்வரி

(நயினாதீவு)

நயினாதீவு 6ம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும், கொண்டவரும் தற்போது இல17/30 கலட்டி முந்தல் வீதி, கொக்குவில் கிழக்கில் வசித்தவருமகிய இராமச்சந்திரன் மகேஸ்வரி அவர்கள் (19.05.2025) திங்கட்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலம்சென்றவர்களான வே.க. கனகசபை - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகளும், காலம்சென்றவர்களான குமாரசாமி - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகளும், காலம்சென்ற இராமச்சந்திரன் அவர்களின் அன்பு மனைவியும், பேரின்பநாதன் (ஓய்வுநிலை வருமான பரிசோதகர், நயினாதீவு பிரதேசசபை), திரவியநாதன் (ஓய்வு நிலை பிரதி அதிபர் யாழ் மத்திய கல்லூரி), செல்லம்மா (இத்தாலி), அன்பழகன் (ஓய்வு நிலை தபால் உத்தியோகத்தர் நயினாதீவு) சோதீஸ்வரி (ஆசிரியை, கோண்டாவில் பரஞ்சோதி வித்தியாலயம்), திருவதனன் (கனடா), தர்சினி (உதவி நூலகர், பிரதேச சபை நயினாதீவு), ஆகியோரின் பாசமிகு தாயாரும், கலாஸ்ரீசிவஞானலெட்சுமி, யோகலெட்சுமி (ஓய்வு நிலை ஆசிரியை கொக்குவில் இந்துக் கல்லூரி), குபேந்திரன் (இத்தாலி), ஜெகதீஸ்வரி, பிரணவநாதர், சடாட்சரி (கனடா), ஸ்ரீராகவன் (உத்தியோகத்தர், யாழ்போதனா வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், காலம்சென்றவர்களான வன்னியசிங்கம், இலட்சுமணன், சிவகாமசுந்தரி, சரவணமுத்து, ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலம்சென்றவர்களான சொர்ணம்மா, பாலசுந்தரம், தனலெட்சுமி, சாந்தலிங்கம், காலம்சென்றவர்களான தங்கரெத்தினம், இரத்தினசாபதி, மற்றும் உமாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், காலம்சென்றவர்களான தம்பிமுத்து, கமலாம்பிகை, பூம்பாவை, ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரியும்.

கார்த்திகா - சுதாகர், ரவிக்குமார் - கலைவானி, ராஜ்குமார் - சிந்துஜா, சுமங்கலை - யோகிதரன், ஹரிசாந் - கிருத்திகா, கிருத்திகா, மதுஷன், மதுஷா, துஷியந்தா, துஷாலினி, துவாரகன், துஷிக்கா, சாகித்தியன், ராம்சரண், சாயகி, சாமளை, மிதுர்சன், ஆகியோரின் அன்பு பேர்த்தியாரும். சங்கவி, ஆதிரா, ஜோன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (22.05.2025) வியாழக்கிழமை காலை 06.00 மணியளவில் கொக்குவில் கிழக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று. பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக காலை 10.00 மணிக்கு நயினாதீவு சல்லிவரவை இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்பட்டும்

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 806 1353, 077 033 4538

இல 17/30 கலட்டி முந்தல் வீதி
கொக்குவில், கிழக்கு

# மரண அறிவித்தல்

தோற்றம்
18 . 12 . 1954



மறைவு
19 . 05 . 2025

## சின்னத்துரை தயாபரன்

(பொறியியலாளர்)

குரும்பசிட்டியைப் பிறப்பிடமாகவும், 68, மருதடி வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட சின்னத்துரை தயாபரன் அவர்கள் நேற்று முன்தினம் (19.05.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவரகளான சின்னத்துரை - மங்களேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பொன்னுத்துரை - பாலாம்பிகை தம்பதியரின் பாசமிகு மருமகனும், சகிதேவியின் (வைத்தியர்) பாசமிகு கணவரும், தீனதயாள் (பொறியியலாளர் - கனடா), திவாகர் (சட்டத்தரணி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கஜந்தினி, அன்றியா டினோஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், பிரபாகரனின் (வைத்தியர்) பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற பாலகுமாரின் மைத்துனரும், சஷாத்மிகா, ஆருக்ஷி, அனுருக்ஷி ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் நாளை (22.05.2025) வியாழக்கிழமை பிற்பகல் 01.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்
077 123 4719, 077 640 8766

68, மருதடி வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

*CS/58315) J-1

# தனியார் பேருந்துச் சேவைகள் தொடர்பில் ஆளுநர் அலுவலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 21

764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களில் சேவைகளில் ஈடுபடும் பேருந்துகளை இன்று புதன்கிழமையிலிருந்து காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து ஆரம்பிக்குமாறும், அதனை மீறிச் செயற்படும் பேருந்துகளுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறும் வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் பணிப்புரை விடுத்துள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் 10ஆம் திகதி பலாலி வீதி திறக்கப்பட்ட நிலையில் 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் சேவைகளை ஒழுங்குபடுத்துவது தொடர்பில் நடாத்தப்பட்ட கலந்துரையாடலின் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையடுத்து இதுதொடர்பில் ஆராயும் சிறப்புக் கலந்துரையாடல் நேற்றுச் செவ்வாய்க்கிழமை யாழ். சுண்டுக்குளியில் அமைந்துள்ள வடக்கு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது.

குறித்த கலந்துரையாடலில் 764, 768 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களில் சேவைகளை நடாத்தும் பேருந்துகளின் உரிமையாளர் சங்கத்தினர் கலந்து கொண்டு தமது நிலைப்பாடுகளைத் தெரியப்படுத்தினர். ஒற்றுமையாக இணைந்து தங்களது முடிவுகளைப் பேருந்து சங்கங்கள் அறிவித்தால் அதனைச் செயற்படுத்தத் தயாராகவிருப்பதாகத் தெரிவித்த வடக்கு ஆளுநர் இல்லாவிடின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுமெனவும் தெரியப்படுத்தினார்.

பேருந்து சங்கங்களிடையே இணக்கம் எட்டப்பட்டிருக்காத நிலையில் வடக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் அனுமதிக்கப்பட்ட வழித்தட அனுமதிக்கு அமைவாக 764 மற்றும் 769 ஆகிய வழித்தடங்களின் பேருந்துகள் யாவும் காங்கேசன்துறை ரயில் நிலையத்திலிருந்து தமது சேவைகளை ஆரம்பிக்கும். 764 வழித்தடப் பேருந்துகள் அங்கிருந்து பலாலி வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும். 769 வழித்தடப் பேருந்துகள் அங்கிருந்து காங்கேசன்துறை வீதியூடாக யாழ்ப்பாணத்தை வந்தடையும்.

இதேவேளை, 764 மற்றும் 769 ஆகிய இரண்டு வழித்தடப் பேருந்துகளும் யாழ்ப்பாண நகரில் ஒரே யிடத்திலிருந்து புறப்படுவதில் சிக்கல்கள் இருப்பதாக 769 வழித்தடப் பேருந்து சங்கத்தினரால் சுட்டிக்காட்டப்பட்டதையடுத்து இதுதொடர்பில் யாழ். மாநகர சபை ஆணையாளருடன் கலந்துரையாடி மாற்றிடத்தை விரைவில் ஒழுங்கு செய்துதருவதாக வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் க. மகேஸ்வரன் தெரிவித்தார். (ம-66)

# மின்கட்டணத்தை அரசாங்கம் 20 வீதத்தால் குறைக்கமுடியும்

## மின்சார நுகர்வோர் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 21

மின்கட்டணத்தை 20 வீதத்தால் குறைப்பதற்கு சாத்தியங்கள் காணப்படுகின்றன என்று மின்சார நுகர்வோர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை மின்சாரசபை, மின்கட்டணத்தை 18.3 வீதத்தால் அதிகரிப்பதற்கு பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளது. இவ்வாறானதொரு பின்னணியிலேயே, மின்கட்டணத்தை அதிகரிக்காமல், மேலும் 20 வீதத்தால் கட்டணக் குறைப்பைச் செய்யமுடியும் என்று மின்சார நுகர்வோர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில், மின்சார நுகர்வோர் சங்கத்தின் பொதுச் செயலாளர் சஞ்சீவ தம்மிக மேலும் தெரிவித்ததாவது: -

மின்சாரசபை கடந்த 2023ஆம் ஆண்டு 57 பில்லியன் ரூபாவையும், 2024ஆம் ஆண்டு 144 பில்லியன் ரூபாவையும் இலாபமாக ஈட்டியது. இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் 22 சதவீத கட்டணக் குறைப்பைத் தொடர்ந்து, இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்கு, மின்சார சபையின் 200 பில்லியன் ரூபாவில் இருந்து 51 பில்லியன் ரூபாவை ஆறு மாத காலத்துக்குப் பயன்படுத்த அனுமதித்து. எனினும், 18 பில்லியன் ரூபாவே இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. மேலும் 183 பில்லியன் ரூபா பயன்படுத்தப்பட வேண்டியுள்ளது. உண்மையான நிலைவரம் இவ்வாறிருக்கையில், எதற்காக மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க வேண்டும்?. உண்மையில் மக்களுக்கு மேலும் சலுகைகளை வழங்க முடியும் - என்றார். (ம-இ)

## கரைதுறைப்பற்று பிரதேசசபை, முல்லைத்தீவு

## 2025 ஆம் ஆண்டில் தண்ணீரூற்று சந்தைப் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்வி அறிவித்தல்

கரைதுறைப்பற்று பிரதேச சபையின் அதிகார எல்லைக்குள் காணப்படும் தண்ணீரூற்று சந்தையில் புதிதாக அமைக்கப்பட்ட கடைகளை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி :-21.05.2025 – 12.06.2025 வரை (முற்பகல் 9.00 மணி தொடக்கம் பி.ப 02.00 மணி வரை அலுவலக நாட்களில் மட்டும்)

கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதி :-13.06.2025 மு.ப 10.00 மணி வரை

கேள்விப்பத்திரம் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :- 13.06.2025 மு.ப 10.30 மணி

| இல | கடை இலக்கம் | கேள்விப்படிவக் கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் ரூபா | கடைக்குரிய மாதாந்த வாடகைத் தொகை ரூபா | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித் தொகை (VAT,NB) நீங்கலாக |
|---|---|---|---|---|---|
| முள்ளியவளை உப அலுவலகம் | | | | | |
| 1 | கடை இல - 01 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 2 | கடை இல - 02 | 2,000.00 | 16,800.00 | 7,000.00 | **1,680,000.00** |
| 3 | கடை இல - 03 | 2,000.00 | 33,600.00 | 14,000.00 | **3,360,000.00** |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாகவும் கரைதுறைப்பற்று பிரதேச சபையின் எல்லைக்குள் நிரந்தரமாக வசிப்பவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கேள்விப்பத்திரத்தினை இரு பிரதிகளில் தயாரித்து மூலப்பிரதியை தலைவர்/ செயலாளர். கரைதுறைப்பற்று பிரதேசசபை. முல்லைத்தீவு. என்னும் முகவரிக்கு முத்திரையிட்டு தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் தண்ணீரூற்று சந்தை புதிய கடை இல....... என கேள்வியின் பெயர் தெளிவாக எழுதப்பட்டு பதிவுத்தபால் மூலம் 13.06.2025 முற்பகல் 10 மணிக்கு முன் கிடைக்கக் கூடியவாறு அனுப்புதல் வேண்டும். அல்லது இதற்கென கரைதுறைப்பற்று பிரதேசசபை தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்பட வேண்டும். கேள்வி நேரத்தின் பின்னர் கிடைக்கும் படிவங்கள் நிராகரிக்கப்படும்.
3. கேள்விப்பத்திரங்களை பெற விரும்புபவர்கள் கிராமசேவையாளரினால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் மற்றும் தேசிய அடையாள அட்டைப் பிரதியுடன் கரைதுறைப்பற்று பிரதேசசபையின் தலைமை அலுவலகத்திற்கு சமூகமளித்து விண்ணப்ப படிவத்தை பெற்றுக் கொள்ள முடியும்.
4. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட மாட்டாது எனினும் தவறுதலாக வழங்கப்பட்டிருப்பின் அது நிராகரிக்கப்படுவதுடன் இது தொடர்பான வைப்புக்கள் எதுவும் மீளளிக்கப் படமாட்டாது.
5. குறித்த கடையின் ஒப்பந்ததாரர்கள் எந்த வகையிலும் உப வாடகைக்கு வழங்கவோ உரிமை மாற்றம் செய்யவோ முடியாது.
6. நீண்ட கால குத்தகை கடைகளுக்கான மாதாந்த கடை வாடகையாக விலை மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் காலத்திற்கு காலம் தீர்மானிக்கப்படும் தொகையினை செலுத்துதல் வேண்டும்.
7. கேள்வி நிபந்தனைகள். அறிவுறுத்தல்களிற்கு அமையாத கேள்விக் கோரிக்கைகளை நிராகரிக்கவும் எந்தவொரு கேள்வி தொடர்பிலும் இறுதி முடிவெடுக்கவும் கேள்விச்சபைக்கே பூரண அதிகாரமுண்டு.
8. அதிகூடிய கேள்வித்தொகை கூறும் கேள்விதாரருக்கு சபையுடனான ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறும் பட்சத்தில் மீள் கேள்வி அறிவித்தல் செய்யப்படும். ஏற்றுக்கொள்ளக்கூடிய குறைந்த கேள்வித் தொகையிலும் குறைவான கேள்வி கோருபவர்களின் கேள்வி வைப்பு பணம் மீளளிக்கப்படமாட்டாது.
9. தெரிவு செய்யப்பட்ட கேள்விதாரர் அறிவித்தல் செய்யப்பட்ட திகதியிலிருந்து 07 நாட்களுக்குள் ஒரே தடவையில் கேள்வித் தொகையின் முழுத் தொகையையும் பி.ப 2.30 மணிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்த உடன்படிக்கை பூர்த்தி செய்தல் வேண்டும்.
10. கேள்வித் தொகை எந்த சந்தர்ப்பத்திலும் சபையால் மீளளிக்கப்பட மாட்டாது.
11. சபையின் அனுமதியின்றி எதுவித திருத்த வேலைகள்.மாற்றங்கள்.புனரமைப்பு வேலைகளும் மேற்கொள்ள முடியாது.
12. தங்களால் நடாத்த உத்தேசிக்கப்படும் வியாபாரத்தின் தன்மை சபையால் பரிசீலிக்கப்பட்ட பின்னரே அனுமதி வழங்கப்படும்.
13. ஒரு குடும்பத்திற்கு ஒரு கடை மட்டுமே வழங்கப்படும்.
14. மேற்குறிப்பிட்ட நிபந்தனைகளின் பிரகாரம் நடக்க தவறுமிடத்து குத்தகை ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டு செலுத்தப்பட்ட பணத் தொகைகள் மீளளிப்பு செய்யப்படமாட்டாது என்பதுடன் அவர்களது பெயர் தவறுநர் பட்டியலில் அட்டவணைப்படுத்தப்படும்.
15. சபையின் தலைவரின் / செயலாளரின் இந்த ஒப்பந்தம் தொடர்பாக எதுவித முடிவையும் ஏற்க வேண்டும். இது தொடர்பாக செயலாளருக்கு எதிராக நீதிமன்றம் மூலம் நடவடிக்கை எடுக்க முடியாது.
16. கேள்வி சம்பந்தமாக மேலதிக விபரங்களை பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் 021-2290001 என்ற அலுவலக தொலைபேசியுடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**செயலாளர்,**
**கரைதுறைப்பற்று பிரதேச சபை,**
**முல்லைத்தீவு.**

(CR/45039) J-1

2025.05.21

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



**அமரர் சபாரத்தினம் விஜயலட்சுமி**

(B.A, (Pera), P.G.D.E (Jaffna), - ஓய்வு நிலை ஆசிரியை)

தோற்றம் 26.09.1946 மறைவு 21.04.2025

**இறைவன் பாதங்களில்**
**நீங்கள் என்றும்**
**வீற்றிருக்க**
**பிரார்த்திக்கின்றேன்.**

117/6, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம்.

கணவர்
M.சபாரத்தினம்

(CS/3159) J-1

# இன அழிப்புக்கு நீதியை அநுரவும் வழங்கமாட்டார்

## சாணக்கியன் எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 21
இன அழிப்புத் தொடர்பில் இந்த அரசாங்கத்தின் ஆட்சியிலும் நீதி கிடைக்காது. ஏனெனில், கடந்தகால ஆட்சியாளர்களைப் போலவே ஜனாதிபதி அநுரகுமாரவும் போர் வெற்றியை கொண்டாடுகின்றார் என்று இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.
நாடாளுமன்றத்தில் நேற்று உரையாற்றிய அவர், இது தொடர்பில் மேலும் தெரிவித்ததாவது:
இறுதிப் போரின்போது ஆயிரக்கணக்கான மக்கள் கொத்துக்கொத்தாக கொல்லப்பட்டனர். கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் நீதியை எதிர்பார்த்துள்ளனர். எனினும், இனவழிப்புக்கான நீதி என்பது மறுக்கப்பட்டுள்ளது. தற்போதைய ஆட்சியின்கீழ் நீதிகிடைக்குமா என்பதிலும் நம்பிக்கை இல்லை. இன அழிப்புக்கான நீதி வேண்டும் என்பதில் தமிழரசுக் கட்சி உறுதியாக உள்ளது. அதற்காகத் தொடர்ச்சியாகக் குரல் கொடுக்கும். மே 18ஆம் திகதி எமது மக்கள் தன்னெழுச்சியாகவே நினைவேந்தல் நடத்தினர். இதன் பின்னணியில் எவ்வித அரசியல் பின்புலமும் இல்லை. நீதி வேண்டும் என்பதில் எமது மக்கள் உறுதியாக உள்ளனர் என்பதையே இது வெளிப்படுத்துகின்றது.
கனடாவில் இனவழிப்பு நினைவகம் அமைக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, கனேடியத் தூதுவரை அழைத்து இது தொடர்பில் இலங்கை விளக்கமளித்துள்ளது. இவ்வாறான விடயங்களை செய்வதை விடுத்து விசாரணைக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த ஆட்சிக் காலங்களைப்போன்று தற்போதும் போர் வெற்றிக் கொண்டாட்டம் இடம்பெறுகின்றது. இதற்கான பாடத்தை எதிர்வரும் தேர்தல்களில் மக்கள் புகட்டுவார்கள் - என்றார். (அ-ம-44)

# சைக்கிள் திருடனை மடக்கியது பொலிஸ்

## 16 சைக்கிள்கள் மீட்பு

## ஹெரோய்னுக்கு அடிமையானவர்

யாழ்ப்பாணம், மே 21
யாழ்ப்பாணத்தில் நீண்ட நாள்களாக இடம்பெற்றுவந்த பல்வேறு சைக்கிள் திருட்டுக்களுடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பிரதான சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.
யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவின் பதில் பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினரால் இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் 40 வயதுடையவர் என்றும், அவர் கடந்த மூன்று மாதங்களுக்கும் மேலாக தொடர்ச்சியாக சைக்கிள் திருட்டுக்களில் ஈடுபட்டு வந்துள்ளார் என்றும் பொலிஸார் கூறியுள்ளனர்.
மீட்கப்பட்ட 16 சைக்கிள்களின் உரிமையாளர்கள், உரிய ஆதாரங்களைச் சமர்ப்பித்து அவற்றைப் பெற்றுக்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்தல் வழங்கியுள்ளனர். (ம-26-125)

## வடக்கு...

யின் செயலாளர் நேற்று வழங்கிவைத்தார். இலங்கை நிர்வாக சேவை மூத்த அதிகாரியான தனுஜா முருகேசன், தனது கடமைகளை இந்த வாரம் பொறுப்பேற்பார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இவர் பொதுச்சேவை ஆணைக்குழுவின் மேலதிக செயலாளராகக் கடமையாற்றிவந்த நிலையிலேயே, தற்போது பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-ம-26)

## அசைவ...

அமைக்கப்பட்டுள்ள அசைவ உணவகத்தை மூடுமாறு வலியுறுத்தி நேற்று ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.
இது தொடர்பில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்ததாவது:-
யாழ்ப்பாணம் நல்லூர் என்பது இந்துக்களின் புனித பூமியாகும். ஆனால், ஒட்டுமொத்த இந்துக்களின் மனங்களை நோகடிக்கும்படியாக, இங்கு அசைவ உணவகமொன்றைத் திறந்துள்ளனர். மிக இரகசியமான வகையில் இந்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.
பொருத்தமில்லாத இடத்தில், பொருத்தமில்லாத சூழலில் இந்த அசைவ உணவகம் அமைக்கப்பட்டுள்ளது. இதை உடனடியாக அகற்றவேண்டும் என்று வலியுறுத்தி நாங்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளோம். எமது கோரிக்கைகள் அடங்கிய மனுவொன்று யாழ்ப்பாணம் மாநகர ஆணையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.
விரைவில் இந்த உணவகம் அகற்றப்படவேண்டும். இல்லையேல், இனிவரும் காலங்களில் பரந்துபட்ட போராட்டங்கள் மேற்கொள்ளப்படும் - என்றார். (அ-ம-125-26-20-66)

## சொகுசுப்...

றுள்ளது. கைதடி முதியோர் இல்லத்துக்கு முன்பாகவே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. குறித்த முதியோர் இல்லத்தில் வசிக்கும் சவரிமுத்து சச்சிதானந்தன் (வயது-69) என்ற முதியவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவர், தேவையின் நிமித்தம் வெளியில் சென்றுவிட்டுத் திரும்பியபோதே விபத்து ஏற்பட்டுள்ளது. மேலதிக விசாரணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (அ-ம-159-26-28)

## இரத்த...

யாழ்ப்பாணம் கொழும்புத்துறைப் பகுதியைச் சேர்ந்த தங்கவேலு கலைச்செல்வன் (வயது - 42) என்ற குடும்பத்தலைவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.
நேற்றுக்காலை 5 மணியளவில் அவருக்கு திடீர் சுகவீனம் ஏற்பட்டுள்ளது. இதையடுத்தே அவர் இரத்த வாந்தி எடுத்துள்ளார். யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நண்பகல் ஒரு மணியளவில் சிகிச்சையின்போது உயிரிழந்துள்ளார்.
இறப்பு விசாரணைகளை யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் திடீர் இறப்பு விசாரணை அதிகாரி ந.பிறேம்குமார் மேற்கொண்டார். (அ-ம-26-20)

## கிருமித்...

திடீர் சுகவீனம் காரணமாக, நேற்றுமுன்தினம் அவர் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில், நேற்று உயிரிழந்துள்ளார்.
காலில் ஏற்பட்டிருந்த காயங்கள் காரணமாக, உடலில் கிருமித்தொற்று ஏற்பட்டு அவர் உயிரிழந்துள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இறப்பு விசாரணைகளை வலிகாமம் கிழக்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். (அ-ம-26)

## புலிகளால்...

தனியார் தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-
இலங்கையில் இனப்படுகொலைகள் இடம்பெற்றன என்று கூறப்படும் குற்றச்சாட்டுகளை நாங்கள் திட்டவட்டமாக நிராகரிக்கின்றோம். கனடா மட்டுமல்ல, உலகில் எந்த நாடாக இருந்தாலும், அவற்றால் முன்வைக்கப்படும் படையினருக்கு எதிரான போர்க்குற்றச்சாட்டுகளை நாங்கள் நிராகரிப்போம்.
ஏனெனில், இலங்கையில் இனப்படுகொலை நடந்தது எனக் கூறப்படுவதை ஏற்கவே முடியாது. போரின்போதுகூட சிவில் மக்களைப் பாதுகாத்தப்படியே போர் முன்னெடுக்கப்பட்டது. விடுதலைப் புலிகளால் பணயக்கைதிகளாக பிடித்து வைத்திருந்த மக்களைக்கூட படையினரே மீட்டனர். இதுவே எமது உறுதியான நிலைப்பாடாகும் - என்றார். (அ-ம-44)

## காணி...

காணி விவகாரம் தொடர்பில் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் விசேட கூட்டமொன்று நடைபெறவுள்ளது என காணி அமைச்சர் லால் காந்த தெரிவித்தார்.
இது தொடர்பில் அமைச்சர் நாடாளுமன்றத்தில் மேலும் தெரிவித்ததாவது:-
காணி விவகாரத்தில், அண்மையில் பிரசுரிக்கவேண்டிய வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் எதிர்வரும் 23ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது. வடக்கு, கிழக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமா அதிபர், அரசாங்க அதிகாரிகள் ஆகியோரை உள்ளடக்கிய வகையிலேயே இந்தக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
மக்களின் காணிகளை அவர்களுக்கு விரைவில் கையளிக்கவேண்டிய தேவைப்பாடு எமக்கு உள்ளது. அப்பகுதிகளில் உள்ள அரசியல்வாதிகளின் ஆலோசனைகளும் பெறப்படும். மக்களின் காணியை சுவீகரிக்கும் எவ்வித நோக்கமும் அரசாங்கத்துக்கு இல்லை. மேற்படி கலந்துரையாடலின்போது இறுதி முடிவை எடுக்கலாம். இதனை இடைநிறுத்துவோம் என்ற தீர்மானம் 23ஆம் திகதி கூட்டத்தில் எடுக்கப்பட்டால் அதனைச் செய்வதற்கும் நாம் தயார் - என்றார். (அ-ம-44)

## விடுதலைப்...

வதற்கான சாத்தியம் காணப்படுகின்றது என்று முன்னாள் இராணுவ தளபதி பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா கூறியுள்ளார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:-
வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்கள் அங்கு சேகரித்த நிதி மூலம் தான் புலிகள் வளர்ந்தனர். பிரபாகரன் நான்கு பேரை வைத்து உருவாக்கிய புலிகளின் எண்ணிக்கை 35 ஆயிரம் பேர் வரை அதிகரிப்பதற்கு இந்த நிதி உதவியே காரணம். பிரபாகரனிடம் போர்த் தாங்கிகள் இருந்தன. விமானங்கள் இருந்தன. படகுகள் இருந்தன. பிரபாகரன் பி-56 துப்பாக்கிகள் வாங்கிய பிறகுதான் நாங்கள் அவற்றை வாங்கினோம். பிரபாகரன் யுத்த தாங்கி எதிர்ப்பு ஆயுதங்கள் வாங்கிய பிறகுதான் நாங்கள் அவற்றை வாங்கினோம்.
1990ஆம் ஆண்டு 20 படைப்பிரிவுகளை உருவாக்கி இருந்தால் 1990ஆம் ஆண்டிலேயே போர் முடிந்திருக்கும். இப்போது யுத்தம் இல்லாதபோதிலும் பாதுகாப்பு விடயத்துக்கு முக்கியத்துவம் கொடுத்தே ஆகவேண்டும். குறைந்தது 10 தற்கொலைக்குண்டு தாரிகளை யாழ்ப்பாணத்தில் உருவாக்குவது வெளிநாடுகளில் உள்ள பணக்காரர்களுக்கு கஷ்டமில்லை.
இராணுவம் முகாம்களுக்குள் முடங்கிக் கிடக்காமல் வெளியேவந்து கண்திறந்து பார்க்கவேண்டும். வெளியில் உள்ள பிரச்சினை பற்றித் தேடவேண்டும். அப்படிச் செய்யாமல் விட்டால்தானே ஸஹ்ரானின் தாக்குதல் இடம்பெற்றது. ஸஹ்ரானால் செய்யமுடிந்தது என்றால் புலிகளால் செய்வது கஷ்டமா? ஒரு குண்டு வெடித்தால் நூறு முகாம்கள் திறக்க வேண்டி வரும். அப்படி நடக்காமல் பார்த்துக்கொள்ளவேண்டும்.
ஒன்றரை இலட்சம் இராணுவத்தினர் நாட்டில் உள்ளனர். அந்த எண்ணிக்கையை குறைக்கமுடியாது. இராணுவத்தின் எண்ணிக்கையை அதிகரித்ததால் தான் போரை வெற்றிகரமாக முடித்தேன். மீண்டும் புலிகள் உருவாகமாட்டார்கள் என்று சொல்லமுடியாது. ஒரு இலட்சத்துக்கு மேற்பட்ட இராணுவத்தை எதிர்த்து புலிகள் சண்டை செய்தார்கள். 75 ஆயிரம் இந்திய இராணுவத்தை எதிர்த்து இரண்டாயிரம் புலிகள் சண்டை செய்தார்கள். இப்படிப்பட்ட மனோநிலையில் உள்ளவர்கள் மீண்டும் உருவாகமாட்டார்கள் என்று எப்படிச் சொல்வது.
புலம்பெயர்களில் சிலர் இங்கு பிரச்சினை இருக்கவேண்டும் என்று விரும்புகின்றனர். பணத்தைச் செலவழித்து தமிழ் இளைஞர்களின் மனங்களை மாற்றி அவர்களை மீண்டும் புலிகளாக மாற்றும் தேவை அவர்களுக்கு உள்ளது. பிரபாகரன் பொறுமையாக இருந்து 35 ஆயிரம் பேர் கொண்ட படையை உருவாக்கினார். மிகவும் சிரமப்பட்டே அதைத் தோல்வியடையச் செய்தோம். இறுதிப் போரில் நாம் தோல்விடைந்திருந்தால் தமிழீழம் உருவாகி இருக்கும் - என்றார். (அ-ம-44)

# தமிழ்த் தேசியக் கட்சிகளால் காவாலித்தனமான அரசியல்!

## அமைச்சர் சந்திரசேகர் காட்டம்



கொழும்பு, மே 21

தமிழ் மக்களின் இருப்புக்கு அச்சுறுத்தல் எனக் கூறும் தமிழ்க் கட்சிகள், அதனை பாதுகாப்பதற்குரிய திட்டங்களை முன் வைக்காமல், காவாலித்தனமான அரசியலை முன்னெடுத்து, இனவாதம் பேசி வருகின்றன என்று கடற்றொழில் அமைச்சர் சந்திரசேகர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொடிய யுத்தம் முடிவடைந்து 16 வருடங்களாகின்றன. எனினும், தமிழ் மக்களின் பிரச்சினைகள் எவ்வித மாற்றமும் கடந்த காலங்களில் தொடர்ந்தன. கடந்த செப்ரெம்பர் மாதத்துக்கு பிறகு இந்நிலைமை படிப்படியாக மாறிவருகின்றது. தமிழ் மக்களுக்கு நம்பகமான அரசாங்கம் உருவாகியுள்ளது. அவ்வாறான அரசாங்கத்துடன் தமிழ் மக்கள் கைகோர்த்து வருகின்றனர்.

யாழ். மாவட்டத்தில் எமக்கு ஒரு பிரதேச சபை உறுப்பினர்கள்கூட இருக்கவில்லை. இன்று 81 உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள் உள்ளனர். யாழ். உட்பட வடக்கில் வாழும் மக்களுக்கு இதயப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன். உள்ளூராட்சிசபைத் தேர்தல் ஊடாக எம்மை மக்கள் உயர்த்தியே வைத்துள்ளனர்.

தமிழ் மக்களின் இருப்பு கேள்விக்குறியாகி விட்டதாக தமிழ்க் கட்சிகள் கூறுகின்றன. தமிழ் மக்களின் இருப்பை தக்க வைப்பதற்காக தமிழ்க் கட்சிகளிடம் உள்ள திட்டங்கள் என்ன? எவ்வித திட்டங்களும் இல்லை. காவாலித்தனமான செயற்பாடுகளே கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின்போது முன்னெடுக்கப்பட்டது. கடுமையாக இனவாதம் பேசப்பட்டது. பணம் பறிமாற்றப்பட்டது. மதுபான போத்தல்கள் வழங்கப்பட்டன. மிகவும் கேவலமான முறையில் செயற்பட்டே தேர்தலில் வெற்றி பெற்றுள்ளனர். மக்களின் உண்மையான அபிலாஷைகள் வெளிப்படவில்லை - என்றார். (ம-44)

## மணமகள் தேவை

யாழ் இந்து 1990 ஆண்டு பிறந்த ரோகினி நட்சத்திரமுடைய செவ்வாய் குற்றமில்லாத பாவம் 16 உள்ள 5' 11" உயரமுடைய கனடாவில் றோயல் வங்கியில் சொப்பையர் பொறியியளராக பணிபுரியும் கனடா பிரயாவுரிமையுடைய மணமகனுக்கு கனடாவிலுள்ளவர்களோ வேறு வெளிநாட்டிலுள்ளவர்களும் சரி தொடர்பு கொள்ளலாம்.

தொடர்பு: 077 976 1221

## வேலைவாய்ப்புகள்

| | |
|---|---|
| ➢ Data Entry | : 0768172547 |
| ➢ Waiter & Kitchen Helper | : 0764674313 |
| ➢ Room Boy | : 0761313000 |
| ➢ Receptionist | : 0770079053 |
| ➢ Photocopy ,Typing,Printing | : 0768323682 |
| ➢ House Keeping | : 0772090680 |
| ➢ நிதி சேகரிப்பு அதிகாரி | : 0760463596 |
| ➢ பண்ணை முகாமையாளர் | : 0776524970 |
| ➢ Assistant Sales Manager (Basic 60,000) | : 0779969661 |
| ➢ Part Time, Online Works | : 0765318147 |
| ➢ Chartered Accountant | : 0771298168 |
| ➢ Sales Representative | : 0773161416 |
| ➢ Accounts Assistant | : 0779104173 |

வேலைவாய்ப்பு வட்சப் குருப்ல் இணைய மற்றும் மேலதிக வேலைவாய்ப்புகளுக்கு: dewmasweb.com
வேலையாட்கள் தேவையா: 0777733368
DEWMAS, 51, Amman Road, Nallur

769 வழித்தட பேருந்துகளுக்கு

## மயிலிட்டி வரை சேவைகோரி இன்றுமுதல் பணிப்புறக்கணிப்பு

யாழ்ப்பாணம், மே 21

யாழ்ப்பாணத்தில் 769 வழித்தட சேவையில் ஈடுபட்டுள்ள தனியார் பேருந்து உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்கள் இன்று புதன்கிழமை முதல் பணிப் புறக்கணிப்புப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக அறிவித்துள்ளனர்.

மயிலிட்டி பகுதியில் இருந்து தமது சேவைகளை ஆரம்பிக்க அனுமதி கோரியே அவர்கள் போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர். (ம-26)



சாவகச்சேரி கச்சாய் வீதி சக்தியம்மன் வித்தியாலய மாணவர்களின் சிறுவர்சந்தை நிகழ்வு நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. (ச 25,9)



வேலணை பிரதேச செயலக உத்தியோகத்தர் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில் குருதிக்கொடைநிகழ்வு பிரதேச செயலக மண்டபத்தில்நேற்று முன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது. (ச-25, 9)

## வேலையாட்கள் தேவை

யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலையில் அமைந்துள்ள Lovely Flowers Shop ஒன்றிற்கு வேலையாட்கள் தேவை.
பெண் வேலையாட்கள் விரும்பத்தக்கது.
(பூமாலை கட்டத் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்)

தொடர்பு: 070 600 5029

## முள்ளிவாய்க்கால் 16 ஆம் ஆண்டு நினைவுநாள்

முள்ளிவாய்க்கால் 16 ஆம் ஆண்டு நினைவுநாளை முன்னிட்டு 18 மே 2025 அன்று லண்டனில் நினைவு நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது. பிரித்தானிய பாராளுமன்ற சதுக்கத்தில் ஆயிரக்கணக்கான புலம்பெயர் தமிழர்களால் நீதிக்கான போராட்ட பேரணியாக வெளிவிவகார அமைச்சகம் மற்றும் பிரதமர் இல்லம் வரை முன்னெடுக்கப்பட்டது.

(CS/3213)P-02








இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.05. 2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.